மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly May 2014

விலை : ரூ.10/- இல்லம் : 2 சுற்றம் : 7 ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி



## தமிழை உலகெங்கும் பரப்பியவர்

# கால்டுவெல்


A.LOGANATHAN
98407 94142
ROYAL
WATERPROOFING
AUTHORIZED PIDILITE APPLICATOR
Royal waterproofing
Pidilite
Epoxy Coating
Damp Proofing
Roof - Terrace
A.C.Sheet
All Painting Works
Joint Sealents
Structural Repairs
Basement Water Tank
Grounding
#63/22,1st Floor, Nelson Manickam Road, Choolaimedu, Chennai - 600094.
Cell : 99400 29577, Email - rwploga@gmail.com


M. Palani
Ph : 2446 1938
4301 8191
THE NEW HOBBY CENTRE
Aquarium, Fishes, Plants, Fish Food, Toys & Accessories
54/1, Mosque Complex, L.B. Road, Adyar, Chennai - 20

மனிதமே முதன்மை!

# முற்றம்

Mutram monthly May 2014

பல்சுவை இதழ்

ஆசிரியர்

**விசவனூர் வே.தளபதி.**

இணை ஆசிரியர்

**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,

உதவி ஆசிரியர்கள்

**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம்.ஏ.,பி.எல்.,

**அ. உமாமகேசுவரி** எம்.ஏ.,

**பி.எம்.பாலா**

**ஜெ. ராஜா சிங்,**

**ஜெய்**

**டேவிட் கிறிஸ்டோபர் ஆனந்த்**

தலைமைச் செய்தியாளர்கள்

**வே. வளையாபதி**

**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,

செய்தியாளர்கள்

**பொன்முடி** சிவகங்கை

**வெ. இராஜ்குமார்** எம்.ஏ., எம்ஃபில்.,

**எஸ்.டி.பி.சாமி**

**சு.ஏழுமலை** எம்.ஏ., எம்ஃபில்.,

**ச. உதயகுமார்**

**க. பவானி** பி.ஏ.,

**சிவக்குமார்** மதுரை

**ரஞ்சித் இமானுவேல்**

**பெ. அர்ஜுன்**

**சாதிக்பாட்சா** கோவை

**மு.கலைச்செல்வன்**

திருவள்ளூர் **ஆனந்த்**

**லோகநாதன்**

**ஷாம் எர்னஸ்ட்**

**எஸ். கண்ணபெருமாள்**

வடிவமைப்பு

**எழில் வரைகலை**

புகைப்படக்காரர்

**இரமேஷ்**

அலுவலக முகவரி

13/5 புத்தா தெரு, கோடம்பாக்கம் ,

சென்னை 600 024

அலைபேசி : 8056281973, 9444363917.

மின்னஞ்சல்:

mutram2010@gmail.com

இணைய தளம் :

www.mutram.in

## உள்ளே

தமிழை உலகெங்கும் பரப்பியவர்
*கால்டுவெல்*....................4

தம்பி வந்துவிட்டார்
தமிழீழம் அமையும் (சிறுகதை)
*இருங்கோவேள்*....................6

இலக்கணங்களின் வழி நிற்கும்
ஒப்பற்றத் தமிழ்மொழி 18
*இயற்றமிழன்*....................10

இலங்கையில் தமிழர்
*முருகர் குணசிங்கம்*....................12

முல்லைப்பெரியாறு தீர்ப்பு:
தமிழக உரிமைப் போராட்டத்தின் வெற்றி
*எஸ். கண்ணபெருமாள்*....................22

புரட்சிக் கவி 7
(கவிதை)....................24


தகவல் அறியும் உரிமைச் சட்டம்
*எஸ்.டி.பி. சாமி*....................25

அண்ணே! ரொம்ப நன்றிண்ணே
*சிறுகதை*....................26

வாக்கு உரிமையும்
தேர்தல் ஆணைய சீர்திருத்தமும்
*வேர்மகள்*....................30

உண்மையைத் தேடி
*இராஜாசிங்*....................32

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற கணக்கிற்கு
எடுத்தனுப்பலாம்.



# தமிழை உலகெங்கும் பரப்பியவர் கால்டுவெல்

தமிழ்மொழியைக் கற்று, தமிழ் மொழியின் பெருமைகளை உணர்ந்து, தமிழுக்குப் பல பெருமைகளைச் சேர்த்த அறிஞர் கால்டு வெல்லின் 200 வது பிறந்த நாள் மே மாதம் 7ஆம் தேதி கொண் டாடப்பட்டது.



அயர்லாந்து நாட்டின் கிலாடி ஆற்றின் கரையில் அன்ட்ரிம் என்னும் இடத்தில் 1814 ஆம் ஆண்டு, மே 7ஆம் தேதி ராபர்ட் கால்டு வெல் பிறந்தார். இளம்வயதில் சமயப்பணிக்காக தமிழகம் வந்த கால்டுவெல் தமிழை ஆவலோடு கற்றார். ஓலைச்சுவடிகளையும் இலக்கியங் களை யும் கற்றார். தமிழில் உள்ள மொழிக் கட்டமைப்பையும், இலக்கியவளத்தையும் படித்தறிந்து மகிழ்ந்தார். வியந்தார். தமிழ் மொழியின் சிறப்புகளை உலகின் பல பாகங் களுக்குத் தெரிவித்தார்.

சமயப்பணி ஆற்ற இந்தியாவிற்குள் குறிப்பாக தமிழகத்திற்கு பலர் வந்தனர். வந்த அனைவரிலும் முதன்மையானவர் கால்டு வெல் அவர்கள் என்றால் மறுப்பார் இல்லை. திருநெல்வேலியின் அப்போஸ்தலர் என்ற சிறப்புப் பெயர் பெற தகுதி உள்ளவர்களின் முதலிடத்தில் இருப்பவர் கால்டுவெல் அத்தியட்சர் ஆவார். 1841 ஆம் ஆண்டு குரு பட்டம் பெற்று நெல்லையில் பேராயராக தமது சயமப் பணிகளைச் சிறப்புடன் செய்தவர். சமயப்பணிகளில் இருந்து ஓய்வு பெற்றபின், இடையங்குடியில் ஒரு அழகான தேவாலயம் எழு வதற்கு காரணமாக இருந்தவர் கால்டுவெல்.

தமிழ்ப்பணி, சமயப் பணிகளோடு புதை பொருள் ஆராய்ச்சியை யும் மேற்கொண்டார் கால்டுவெல் அவர்கள்.

இந்த ஆய்வில்தான் தமிழர்களின் ஈமத்தாழிகள் பலவற்றைக் வெளிக் கொணர்ந்தார். பழங் காலத்தில் கட்டப்பட்டிருந்த கட்டிடங்களின் அமைப்பை யும் சிறப்பையும் வெளி உலகுக்குக் தெரிவித்தார். பாண்டியர்களின் கயல் சின்னம் பொறிக்கப்பட்ட நாணயங் களையும் இவர் கண்டுபிடித்தார். இது மாதிரியான கண்டுபிடிப்புச் செய்திகளை யெல்லாம் உள்ளடக்கி 1881 ஆம் ஆண்டு 'திருநெல்வேலி சரித்திரம்' என்ற அற்புதமான நூலை வெளியிட்டார். அப்போது சென்னையிலிருந்த ஆங்கிலேய அதிகாரமையத்தால் இந்நூல் வெளியிடப் பட்டது. இந்நூல் இலண்டனிலும் வெளியிடப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

2008 ஆம் ஆண்டு மீண்டும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது. இந்தப் பதிப்பை தமிழக அரசு தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டால் தமிழுக்கு இன்னும் சிறப்புச் சேரும். கால்டுவெல் லுக்கும் புகழ் சேரும்.

இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், ஆங்கிலம், பிரஞ்சு மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்த கால்டுவெல் அவர்கள் தமிழ் கற்றார். பின்னர் தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழி களையும் கற்றார். எல்லா மொழிகளிலும் உயர்ந்தது தமிழ் என்றும், எல்லாமொழிகளுக் கும் தாய் தமிழ் என்றும் தமிழ் செம்மொழி என்றும் உலகறியச் செய்தவர் கால்டுவெல் அவர்கள்.

தமிழ், தனித்தன்மை வாய்ந்த மொழி. திராவிட மொழிக்குடும்பத்தின் மூத்த முதல் மொழி தமிழ் தான் என்று தனது ஆய்வின் இறுதியில் தெரிவித்து, உரிய சான்றுகளுடன் நிறுவிய மாமேதை கால்டுவெல். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற அவரது நூல் பல பதிப்புகளைக் கண்டிருக் கின்றது. யாதும் ஊரே யாவரும் கேளிர் தீதும் நன்றும் பிறர்தர வாரா என்ற கணியன் பூங்குன்றி னாரின் பாடலை பல மொழிகளில் மொழி பெயர்த்து, உலகின் அறிவுக் குடிமக்களில் முதன் மையான வர்கள் தமிழர்கள் என்பதை வையகத் துக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியவர் கால்டு வெல்.

எங்கோ பிறந்து, தமிழகத்திற்கு வந்து, சமயத் தொண்டுகளாற்றி, தமிழ் மொழியைக்கற்று, தமிழ் மொழியில் இயல்பாய் அமைந்து கிடக்கும் மொழியியல் சிறப்பைக்கண்டு வியந்து, தமிழின் மேன்மையை மேதினியில் நிலைநாட்டிய மாமேதை டாக்டர் கால்டுவெல் 1891ம் ஆண்டு ஜனவரி 31 அன்று தாம் ஆற்றி வந்த சமயப் பணி களில் இருந்த ஓய்வு பெற்று, கொடைக்கானல் மலையில் தங்கி வாழ்ந்து, அங்கு 2881891 அன்று இயற்கை எய்தினார்.

அவரது உடல், அவர் 50 ஆண்டு காலம் தங்கி யிருந்து சமயத்தொண்டுகள் ஆற்றிய, இடையன் குடியில், அவர் எழுப்பிய தேவாலய வளாகத்தி லேயே அடக்கம் செய்யப்பட்டுள்ளது. கால்டு வெல் அவர்கள் 77 ஆண்டு காலம் வாழ்ந்தார். அதில் 53 ஆண்டுகாலம் தமிழகத்தில் வாழ்ந்தார். அந்த 53 ஆண்டுகளும் தமிழோடு வாழ்ந்தார். வாழ்ந்தது மட்டுமல்ல, தமிழுக்கு யாரும் செய்தி ராத அரிய தொண்டுகளை தமிழ் பெருமைப் படும் அளவிற்குச் செய்திருக்கிறார்.

பேரறிஞர் அண்ணா தமிழக முதல்அமைச் சராகப் பொறுப்பேற்று, 1968ம் ஆண்டில் நடத் திய இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டின் போது, 21, 1968 அன்று சென்னைக்கடற்கரை காமராஜர் சாலையில் டாக்டர் கால்டுவெலின் திருவுருவச் சிலையை நிறுவினார். 27. 6. 2010 அன்று கோவை மாநகரில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு நிறைவு விழாவில் கால்டுவெல் அவர் களின் நினைவாக அவரது உருவம் பொறித்த அஞ்சல்தலை கலைஞர் அரசால் வெளியிடப் பட்டது.

இதற்கு முன்பே 4.2.2010 அன்று இடையங் குடியில் கால்டுவெல் வாழ்ந்து மறைந்த இல் லத்தை நினைவு இல்லமாக மேம்படுத்த அறிவிப்பு வெளியாகி, அப்பணி ஒரு மாதத்திற்குள் நிறைவு பெற்று, அவரது மார்பளவு வெண்கலச்சி லையுடன் திறந்து வைக்கப்பட்டது கலைஞரால்.

200 ஆண்டுகள் நிறைவுபெறும் அப்பெரு மகனாரின் பிறந்த நாள் கொண்டாட்டத்தை அரசு விழாவாக கொண்டாட வேண்டும் என்ற தென்னிந்திய திருச்சபைகளின் திருநெல்வேலி திருமண்டலப் பேராயர் கிறிஸ்துதாஸ் அவர் களின் வேண்டுகோளை ஏற்று தற்போதைய முதல்வர் ஜெயலலிதா அவர்கள், தமிழ்ப் பேரறிஞர் கால்டுவெல் அவர்களின் பிறந்த நாள் அரசு விழா வாக கொண்டாடப்படும் என்று அறிவித்தி ருப்பது தமிழுக்குத் தரப்படும் மரியாதையாகும்.

தமிழைச் சிறப்பித்த, ராபர்ட் கால்டுவெல் அவர்களைச் சிறப்பித்த அனைவரையும் தமிழுலகு வாழ்த்தும். ◆

சிறுகதை

# தம்பி வந்துவிட்டார்!
## தமிழீழம் அமையும்

இருங்கோவேள்

பதின்வயது முடிந்த பருவம் அவனுக்கு. எதையாவது செய்ய வேண்டும், சாதிக்க வேண்டும், பிறரிலிருந்து நாம் வேறுபட்ட மனிதனாக உலகில் மிளிர வேண்டும் என்ற பேராவல். ஆனால் இருப்பதோ ஒரு சிற்றூரில். திறமையை வளர்த்துக் கொள்ளவோ இயலாத சூழல். படிப்பைத் தொடர இயலா குடும்பச்சூழல்.

ஆயினும் பொன்முடி தன்னை வளர்த்துக் கொண்டான். உழைப்பு இல்லாத காலங்களில், நேரங்களில் உடற்பயிற்சியின் மூலம் தனது உடல் நலத்தை சிறப்பானதாக ஆக்கிக் கொண் டான்.

முறுக்கேறிய உடம்பு, சாதிக்க வேண்டும் என்ற துடிப்பு, வடிகால் இல்லாத நிலை. அந்த நிலைதான் பொன்முடியைஅடிதடியில் இறங்க வைத்தது. தினம் ஒன்றுக்கும் மேற்பட்ட சண்டைகள். பெற்றோருக்கு பெருந்துன்பம்.

பொன்முடியின் பெற்றோரோ ஒழுக்கத்தின் ஊற்றுக்கண்கள். அமைதியின் அகம், வம்பு தும்பிற்குச் செல்லாத வாழ்வியலின் இலக்கணம். தமிழின் பால் தாய்க்கு இணையான பற்று இப்படிப்பட்ட பெற்றோர்களின் மகன்தான் ஊர் வம்பு கொண்டு வந்தான். ஊர் வம்பு என்றாலும் அவனது செயலில் ஒரு நேர்மையும் இருந்தது. பெரிதாகக் கண்டிக்க முடியவில்லை. கண்டிக்காமல் இருக்கவும் இயலவில்லை. பெருந்துன்பமாய் ஆகிப்போனான் பொன்முடி. பெற்றோருக்கு மட்டுமல்ல அந்த ஊருக்கும்தான்.

அன்று பொன்முடியின் கொல்லையில் கதிர் அறுவடை நடந்தது. இரண்டு மூன்று பேர் செய்கிற



வேலையை பொன்முடி ஒரு ஆள் செய்வான். ஆகவே பெற்றோர் அவனை எதுவும் சொல்லாமல் கொல்லைக்கு அனுப்பி வைத்தனர்.

தன்னுடன் சிலரைச் சேர்த்துக் கொண்டு அறுவடையில் இறங்கி மதியத்திற்குள் முழுவதுமாக அறுத்து முடித்துவிட்டனர். பொன்முடியின் வேகத்துக்கு ஈடு கொடுக்க வேண்டும் என்பதற்காகவே இளவட்டங்கள் தங்களது வேலையை வேகமாகச் செய்தனர். மதிய உணவுக்கு அனைவரும் செல்லும் நேரம் வந்துவிட்டது. கதிர் அரிகளைச் சேர்த்து பெரிய கட்டாகக் கட்டி ஆளுக்கொன்று தூக்கிக் கொண்டு நெல் அடிக்கும் களத்திற்கு கொண்டு வந்து சேர்த்தனர். பொன்முடியோ இரண்டு கட்டுகளை ஒன்றாக்கி, தூக்கிக் கொண்டு களத்திற்கு வந்து சேர்ந்தான்.

தனது வேலை என்பதால் இப்படிச் செய்கிறான் என்று யாராவது எண்ணினால் அது பெருந் தவறு. நண்பர்கள் உறவினர்கள் வீட்டு விவசாய வேலைகளுக்குச் சென்றாலும் இதே உழைப்பு தான். இதே வேகம் தான்.

நெற்கட்டுகள் களத்திற்கு வருவதற்கு முன்னே உழைப்பாளர்கள் சாப்பிட உணவு, களத்திற்கே கொண்டு வந்து விட்டார்கள் பொன்முடியின் தாயார்.

பொன்முடியின் கொல்லையில் அறு வடை என்று சொல்லி அறுவடைக்கு ஆட்களை அழைத்தால், வரமாட்டேன் என்று சொல்லி மறுக்கிறவர்கள் அந்த வட்டாரத்தில் யாரும் இருக்க மாட்டார்கள். காரணம், பொன்முடி அம்மா சமைத்துத் தரும் அந்த உணவுதான். சுவையில் அவர்களை வேறு யாரும் விஞ்ச முடியாது. அன்றும் அப்படித்தான். உழைப்பாளர்கள் விரும்பி உண்டனர். மற்றவர்களைவிட பொன்முடி அதிகமாகவே சாப்பிட்டான். இவர்கள் சாப்பிடுவதை பொன்முடியின் தந்தையார் கவனித்துக் கொண்டே இருந்தார்.

யாருடைய பட்டையில் உணவு குறைந்தாலும் (பட்டை என்பது பனைமர ஓலையில் சாப்பிடுகிற பாத்திரம் போன்று செய்வதுதான். இதில் தண்ணீர் ஊற்றினாலும் அதிலேயே இருக்கும்) தனது மனைவியை அழைத்து உணவு கொடுக்கச் சொன்னார். காய்கறிகளை வைக்கச் சொன்னார். பிறர் உண்கிறபோது அதைப் பார்த்து மகிழ்வதுதான் அவருடைய குணம். அன்றும் அப்படித்தான். நன்றாகச் சாப்பிடுங்கள், நன்றாகச் சாப்பிடுங்கள், வயிறு நிறையச் சாப்பிடுங்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தார். உணவு வேளை முடிந்ததும், "ஒரு அரை மணிநேரம் தூங்குங்கப்பா அதற்குப் பிறகு கட்டுக்கட்டி களத்துக்கு கொண்டு வரலாம்" என்று சொல்லிவிட்டு அவர்கள் வீடு நோக்கிச் சென்றனர்.

பொன்முடியும் அவனுடன் வேலைசெய்த மற்றவர்களும் களத்திற்கு அருகில், தாங்கள் அமர்ந்து சாப்பிட்ட அந்தப் வேப்பமரத்தின் நிழலில் படுத்தார்கள். அரைமணிநேரம் முடியு முன்னே அனைவரும் எழுந்து வாங்கப்பா போவோம் என்று கொல்லைக்குச் சென்று கதிர் அனைத்தையும் ஒரு ஆள் தூக்கும் அளவிற்கு பல கட்டுகளாகக் கட்டினர். பிறகு ஒவ்வொருவரும் ஒவ்வொரு கட்டைத் தூக்கிக் கொண்டு களத்திற்கு விரைந்தனர்.

பொன்முடி வழக்கம் போல் இரண்டு கட்டுகளைச் சுமந்து கொண்டு ஓட்டமும் நடையுமாமக வந்து கொண்டி ருந்தான்.

எல்லாக்கட்டுகளும் களத்திற்கு வந்து சேர்ந்து விட்டன. அதன் பிறகு பெரிய மரக் கட்டையில் கதிர்களை அடிக்க வேண்டும். அடிக்கப்பட்ட அந்த கதிர்களை களத்தில் போட்டு அதன்மேல் நாலைந்து இணை மாடுகளை இணைத்து, மூன்று அல்லது நான்கு தொகுப்பு மாடுகள் சுற்றிச் சுற்றி நடந்து வரும். அப்படி அவைகள் நடக்கும் போது கதிர் அடிக்கும் போது கீழே விழாத நெல்மணிகள் மாடுகளின் கால் மிதியில் கீழே விழுந்து விடும்.

இவ்வாறு மாடுகள் சுற்றி வருவதை பொணையல் அடிப்பது என்று சொல்லுவார்கள் (பிணையல் அடிப்பது) இப்படி மாடுகள் சுற்றி வரும்போது, காய்ந்தும் காயாமலும் இருக்கும் அந்தக் கதிர்களை மாடுகள் தின்று, சுற்றிவராமல் நிற்பதைத் தடுக்க மாடுகளின் வாயில் மோர்ச் சிண்டு என்ற ஒரு பனை நார் அல்லது பனை ஓலையினால் செய்யப்பட்ட மூடியைப் மாடுகளின் வாய்க்குப் போட்டு மாடுகளின் கழுத்து களில் கட்டி விடுவார்கள். மாடுகள் கீழே குனிந்து தளுக்கைத் தின்னாமல் (தளுக்கு என்பது நெற்

கதிர்களை கட்டையில் அடித்து நெல் மணிகள் உதிர்ந்ததும் ஒன்றிரண்டு மணிகள் அந்தக் கதிரில் இருக்கும். இது சிறிது பசுமை யாகவும் இருக்கும். இவைகளை மாடுகள் வைக் கோலை விட மிகவும் விரும்பி உண்ணும்.) சுற்றிச் சுற்றி நடந்து கொண்டே இருக்கும்.

அவைகளை வழிநடத்த ஒருவர் பிணையல் கயிறை தன் கையில் வைத்திருப்பார். தளுக்கி னால், பெண்களின் தலைமுடிச் சடை போல் பின்னப்பட்ட கயிறினால், வலிக்காதவாறு மாடுகளை அடிப் பார்கள். இந்தக் கயிறை பழுது என்று சொல்லுவார்கள். இதை வைத்தே நேற்கதிர்களை சேர்த்துப் பிடித்து மரக்கட் டையில் அடிப்பதற் கும் பயன்படுத்துவார்கள். இப்பழுதினால் மாடுகளை அடித்து சுற்றிச்சுற்றி வரச் செய் வார்கள். இடையில் மாடுகள் சாணம் போட்டால் அதை அந்த மாடுகளை நடத்துபவர், கீழே கிடக்கும் தளுக்குகளை எடுத்து சாணம் கீழே விழாதபடி அதை எந்திப் பிடித்து களத்திற்கு அப்பால் அல்லது ஓரத்தில் எறி வார்கள்.

நெற்கட்டுகள் அடித்து முடிக்கப் பட்டபின், மாடுகளை அவிழ்த்து, யாருடைய மாடுகளோ அவர்களது வீட்டுக்கு மாடுகளை ஓட்டிக் கொண்டுபோய்க் கொண்டிருக்கும் போது ஒரு குடுகுடுப்பைக்காரன் வர, இந்த இளவட்டங்கள் அவனைக் கிண்டலடிக்க அவனோ பொறுக்க முடியாமல் "இன்னும் மூன்று நாளைக்குள் உங்களது தலை சுக்கு நூறாக வெடித்துச் சிதறிவிடும்" என்று சொல்ல, இவர்களுக்கோ கோபம். களத்தில் வேலை இருந்ததால் அவனை அப்படியே விட்டுவிட்டு நெல்லைத் தூற்றி சாக்குகளில் மூட்டையாக கட்டி வீட்டில் இறக்கிவிட்டு, அந்த குடுகுடுப் பைக்காரன் எங்கே இருக்கிறான் என்று தேடிக் கண்டுபிடித்தனர்.

"எங்கள் தலையா சுக்கு நூறாகும் இதோ பார் உன் தலையை" என்று பொன்முடி குடுகுடுப் பைக்காரனை குறிவைத்து தலையில் தாக்க அவனது மண்டை உடைந்தது. அருகிலிருந்த அவனது நண்பர்களும் குடுகுடுப் பைக்காரனைத் தாக்க அவனது நிலைமை கவலைக்கிடமானது. அடித்துப் போட்டுவிட்டு எல்லோரும் ஓடிவிட்டனர்.

குடுகுடுப்பைக்காரன் மயங்கிய நிலையில் கிடக்க செய்தி ஊரெல்லாம் பரவிவிட்டது. பொன்முடியின் தந்தையாருக்கும் செய்தி வர, அவர் குடுகுடுப்பைக்காரன் நிலைமைக்கு தனது மகன் காரணம் என்பதை அறிந்து, அந்த குடுகுடுப்பைக்காரனை மருத்துவரிடம் கொண்டு சென்று மருத்துவம் செய்து, அவனிடம் செலவுக்கும் காசு கொடுத்துவிட்டு வீட்டுக்கு வந்தார்.

பொன்முடியோடு சேர்ந்து குடுகுடுப் பைக் காரனை அடித்த மற்ற நண்பர்கள் வீட்டிலிருந் தும் அந்த குடுகுடுப்பைக்காரனுக்கு அரிசியும் பணமும் கொடுத்து அவனை அவ்வூரை விட்டு அனுப்பி வைத்தனர்.

இரவு வெகுநேரம் வரை பொன்முடி வீட்டுக்கு வரவில்லை. எல்லோரும் சாப்பிட்டுத் தூங்கும் நேரம் வீட்டுக்கு வந்து அம்மாவிடம் சோறு போடச் சொல்லி சாப்பிட்டுக் கொண் டிருக்கும் போது அப்பா அடுப்பங்கரைக்கு வந்துவிட்டார்.

முன்போல் அவர் அவனைத் திட்டவில்லை. மிகவும் பொறுமையாக, நீ இங்கே இருக்க வேண்டாம். உனக்கு யாரையாவது அடிக்க வேண்டும், எதையாவது உடைக்க வேண்டும் என்ற எண்ணம்தான் இருக்கிறது. எனவே நீ இலங்கைக்குச் செல். நீ அங்கே செல்வதற்கான எல்லா ஏற்பாடுகளையும் நான் செய்து தருகிறேன். அங்கே தமிழருக்கு எதிரான காரியங்கள் நிறைய நடக்கின்றன. அதை தடுப்பதற்கு, தமிழின எதிரிகளை அடிப்பதற்கு உனது உடல் வலிமையை, புத்தியைப் பயன் படுத்து. என்று சொல்லிவிட்டு படுக்கைக் குச் சென்றுவிட்டார்.

பொன்முடிக்கு அன்று இரவு முழுவதும் தூக்கம் இல்லை. தனது தந்தையின் மூலம் இலங்கையில் தமிழர் படும் பாட்டை அறிந் திருந்தான். ஆகவே தந்தையார் சொன்னதும், நாம் அங்கே செல்ல வேண்டும் என்ற எண்ணம் அவனது மனதை முழுவதுமாக ஆக்கிரமித்துக் கொண்டது. எப்படிப் போகப் போகிறோம்? என்ன செய்யப்போகிறோம் என்பதைப் பற்றியெல்லாம் அவன் யோசிக்கவில்லை.

அங்கே போய், தமிழின எதிரிகளை எப்படி அழிக்க வேண்டும். அதற்கான செயல்களை நாம் எப்படிச் செய்ய வேண்டும் என்ற எண்ண ஓட்டத் திலேயே இருந்தான்.

விடிந்தது, நேற்று வீட்டிற்கு கொண்டு வந்த நெல்மணிகளை களத்தில் பரப்பி வெயிலில் காய விட்டுவிட்டு, மற்றொரு பக்கம் மாடுகளின் காலடியில் கிடந்த கூலத்தை வைக்கோலாகும் பொருட்டு, அவைகளையும் உதறி காயவைத்து விட்டு நண்பர்களுடன் ஊர் சுற்றக் கிளம்பி விட்டான். என்றாலும், அவன் மனமோ தமிழின எதிரிகளையே சுற்றிச் சுற்றி வந்தது. இரண்டு நாட்கள் கடந்தன.

தந்தை இது பற்றி எதுவும் சொல்லவில் லையே என்று, அம்மாவிடம் கேட்க, அம்மாவோ "அவங்க ஏதோ கோவத்துல சொல்லிருப்பாங்க நீ ஒழுங்கா இங்கேயே இரு" என்று சொன்னதும் ஏதோ தன்னைவிட்டுப் போவது போன்று உணர்ந்தான் பொன்முடி.

அடுத்தநாள் காலை தந்தையார் அழைத்தார். நகரத்திலிருக்கும் ஒருவரின் முகவரியைக் கொடுத்தார். அவரைப்போய்ப் பார், நீ இலங்கை செல்வதற்கு அவர் எல்லா ஏற்பாடுகளையும் செய்து தருவார் என்று கூறி கையில் பணமும் கொடுத்து அனுப்பினார்.

அவன் அம்மாவுக்கோ, மகனைப் பிரிய மனமில்லை என்றாலும், ஒரு நல்ல காரியத்துக் குத் தானே செல்கிறான் என்று மனதை தேற்றிக் கொண்டார்கள்.

பொன்முடி புறப்பட்டான், நண்பர்களிடம் சொல்லவில்லை. உறவினர்களிடம் சொல்ல வில்லை. நகரத்திற்குச் சென்று விட்டான். அதன் பிறகு 12 நாட்கள் கழித்து அவனது தந்தைக்கு ஒரு கடிதம் வந்தது ஈழத்திலிருந்து. "தம்பி வந்து விட்டார், உங்களுக்கு நன்றி! நாம் வெல்வோம்!! தமிழீழம் அமையும்!!" என்று அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

மகனைப் பிரிந்தாலும், இன விடுதலையில் நமது பங்கும் இருக்கிறது என்ற மனநிறைவில் தனது அன்றாடப் பணிகளைச் செய்ய ஆரம் பித்து விட்டார் பொன்முடியின் தந்தையார்.

◆


NGO

நீங்களும் தொண்டு நிறுவனம் தொடங்க
நாங்கள் வழிகாட்டுகிறோம்!

- புதிதாகத் தொண்டு நிறுவனம் தொடங்கி நடத்த...
- தொண்டு நிறுவனத்துக்குத் தேவையான சட்ட திட்டங்கள் தயாரிக்க...
- சட்ட திட்டங்கள் தயாரித்தபின் முறையாகப் பதிவு செய்ய...
- தொண்டு நிறுவனம் தொடங்கிய பிறகு மற்ற சான்றிதழ்களை வாங்க...
- மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் நிறுவனத்தை நடத்த நிதி திரட்ட...
- தொண்டு நிறுவனம் தொடர்பான அனைத்து பணிகளுக்கும்...

தொடர்புக்கு...

என்.ஜி.ஓ. கன்சல்டன்சி

17 தரைத்தளம், ரெயின்போ ஆர்கேட், 21/23, தியாகராயா சாலை,
பாண்டிபஜார், சென்னை - 600 017.
செல் : 9941523034, 9710255798 மின்னஞ்சல் : newngotrust@gmail.com

இயற்றமிழன்

தமிழில் சொல்லின் இறுதியில் நிற்கும் மெய்யெழுத்துக்கள் ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொன்றே யாகும். (நெட் டெழுத் திம்பரும் தொடர்மொழி யீற்றும் குற்றியலுகரம் வல்லா றூர்ந்தே தொல்காப்பியம். எழுத்ததிகாரம் 36.) உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் இறுதியில் வரும். தெலுங்கு கன்னடம் துளு என்னும் திராவிட மொழிகளில் ஒவ்வொரு சொல்லும் உயிரீறாக முடியும். மலையாளம் தமிழ்முறையைப் பின்பற்றிய போதிலும், எல்லாச் சொற்களையும் உயிரீறாக முடிக்கவே பெரும்பாலும் முயல்கின்றது. ஒலி எளிமை கருதியே இந்த முறை இம்மொழிகளில் காணப்படுகின்றது. மண், பொன், நெல் என்னும் மற்ற மெய்யீற்றுச் சொற்களும் மிக எளிமையாக ஒலிக்கப்படும் பொருட்டு, தமிழ்மக்களின் பேச்சில், மண்ணு, பொன்னு, நெல்லு என்று ஒலிக்கப்படுகின்றன. (உ சாரியை என்பர்.)

சொல்லின் இடையே உயிரெழுத்துக்கள் இரண்டு (vowel clusters) சேர்ந்து வருவதில்லை. அவை இரண்டுவரின், அவற்றை உடன்படுத்த வகரம் அல்லது யகரம் உடம்படு மெய்யாக வரும். சொல்லின் அடையே மெய்யெழுத்துக்கள் பலவாறு மயங்கி வரும். தொல்காப்பியனார் கூறியுள்ளவாறு,

# இலக்கணங்களின் வழி நிற்கும் ஒப்பற்றத் தமிழ் மொழி

18



வெட்கம், கட்சி, பெட்பு

விற்க, முயற்சி, கற்பு ட ற ல ள முன்

வெல்க, வல்சி, வன்பு க ச ப

(ஞணநமன யரல வழள என்னும் அப்பதி னொன்றே புள்ளி யிறுதி *தொல்காப்பியம் எழுத்ததிகாரம் 78)*

கொல்யாளை

நல்வழி ல ள முன்

வெள்யாறு ய 5

கள்வர்

(டறலள என்னும் புள்ளி முன்னர்க் கசப என்னும் மூவெழுத் துரிய *தொல்காப்பியம் எழுத்ததிகாரம் 23)*

எண்கு, பண்பு, வெண்மை ண ன முன்

நன்கு, அன்பு, மென்மை க ச ஞ ப ம ய வ

(அவற்றுள், ணனஃகான் முன்னர்க் கசஞப மயவவ் வேழும் உரிய தொல்காப்பியம் எழுத்ததிகாரம் 26)

ஆய்க, ஆர்க, ஆழ்க

பாய்ச்சு, பார்த்தல், கீழ்மை ய ர ழ முன்

சாய்வு, சார்பு, வாழ்வு மொழி முதல் மெய்கள்

(யரழ என்னும் புள்ளி முன்னர் முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும் தொல் *காப்பியம் எழுத்ததிகாரம் 29 )*

தொல்காப்பியனார் காலத்து வழங்கிய சில அரிய ஒலிகள் இக்காலத்து இல்லாமற் போயின. காலஞ்செல்லச் செல்ல, இவ்வாறு சில ஒலிகள் குறைதல் இயல்பே. எடுத்துக்காட்டாக ஞ, ந, ம, வ என்னும் மெய்யெழுத்துக்களை அடுத்து யகரம் நிற்றல் உண்டு எனத் தொல்காப்பியனார் கூறியுள்ளார்.

ஆயின், அவ்வாறு நிற்றலை விளக்கும் சொற்கள் இல்லாமை கண்ட நச்சி னார்க்கினியர், "இங்ஙனம் ஆசிரியர் சூத்திரம் செய்தலின் அக்காலத்து ஒரு மொழியாக வழங்கிய சொற்கள் உள என்பது பெற்றாம். அவை இக்காலத்து இறந்தன." என்றார். (தொல் எழுத். 27) மகரத்தின் முன் வகரம் நிற்கும் என்று தொல்காப்பியனார் கூறியதற்கும் இவ்வாறே, "இதற்கும் உதாரணம் இக்கலத்து இறந்தன." என்றார். (தொல். எழுத். 28) ஆதலின், காலப்போக்கில் ஒலியசை முறையில் மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டே வருகின்றன என அறியலாம்.

ங, ஞ, ண, ந, ம, ன என்னும் மூக்கின் மெய்களை அடுத்து அவற்றின் இனமாகிய கசடதபற நிற்றல் பெரு வாக்காகும். (ஙஞண நமன எனும்புள்ளி முன்னர்த் தத்தம் இசைகள் ஒத்தன நிலையே. *தொல்காப்பியம். எழுத். 25)*

இவ்வாறு ஒரு மெய்யின் முன் அம்மெய்யே வந்து மயங்கும் மயக்கம் உடனிலை மெய்ம் மயக்கம் எனப்படும். (கசதப ஒழித்த ஈரேழன் கூட்டம் மெய்ம்மயக் குடனிலை ரழஒழித் தீரெட்டு ஆகுமிவ் விருபால் மயக்கும் மொழியிடை மேவும் உயிர்மெய் மயக்கள வின்றே) அவ்வாறு மயங்காத மெய் இரண்டே, அவை ர ழ என்பன.

(மெய்ந்நிலை சுட்டின் கல்லா எழுத் தும் தம்முன் தாம்உரூஉம் ரழ அலங் கடையே. *தொல்காப்பியம். எழுத். 30)*

இம்முறைக்கு வேறான ஒலியசைமுறை வடமொழி முதலான பிற மொழிகளில் அமைந்துள்ளது. ஆதலின், பிறமொழிச் சொற்கள் தமிழில் புகும்போது, மெய்களுக் கிடையே உயிர் புகுத்தியோ, மெய்களில் ஒன்றை மற்றொன்றாகத் திரிந்தோ (anaptyxis or assimiliation) ஒலித்தற்கு எளியன ஆக்குவர். ஏனைத் திராவிட மொழிகளில் வடசொற்கள் பல கலந்து அந்த ஒலிமுறை பழகி விட்டமையால் இவ்விதிகள் போற்றப்படுவதில். தமிழில் மட்டும் போற்றப்படுகின்றன.

தொடரும்...

# இலங்கையில் தமிழர்

**முருகர் குணசிங்கம்**

தென் இந்தியப் பூர்வீக இனங்களும், இலங்கையின் பூர்வீக இனங்களும் ஒரே இனக் குழுவைச் சேர்ந்தவையாக, வரலாற்றுக்கு முந்திய காலத்தில் இருந்திருக்கின்றன என்பதைக் காண முடிகின்றது. எனினும் காலப்போக்கில் பல்வேறு பட்ட இனங்களும் அப் பூர்வீக மக்களுடன் இணைந்து கலந்து வருவதையும் அண்மைக் காலம் வரை அவதானிக்கமுடிகின்றது.

இந்நிலையில், உலகின் பல பாகங்களில் ஏற்பட்ட மனிதத் தோற்றம் பற்றியோ, அல்லது இந்தியத் துணைக் கண்டத்தில் காணப்பட்ட ஆரம்பகால இனப்பரம்பல் பற்றியோ ஆய்வு செய்வதைத் தவிர்த்து, குறிப்பாகத் தென் இந்தியாவிலும், சிறப்பாக இலங்கையிலும் ஏற்பட்ட ஆதிகால இனப்பரம்பல் பற்றியும், அவற்றின் ஆரம்பக் கட்டம் பற்றியும் சுருக்கமாக ஆராய்வதன் மூலமும், இலங்கைத் தமிழர் தோற்றம் பற்றியும், அவர்களது வாழ்க்கையைப் பற்றியும் சுருக்கமாக ஆராய்வதன் மூலமும், இலங்கைத் தமிழர் தோற்றம் பற்றியும், அவர்களின் தனித்துவமான இன அடையாளத்தைப் பற்றியும் அறியமுடியும்.





பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆதிகால மனிதர் தென் இந்திய, இலங்கைப் பிராந்தியங் களில் வாழ்ந்திருக்கின்றார்கள் என்ற கருத்து அறிஞர்களிடம் இருந்த போதும், இற்றைக்கு 28,500 வருடங்களுக்கு முன் வாழ்ந்திருக் கின்றார்கள் என்பதனைச் சான்றுகளினூடாகத் திட்டவட்டமாகக் கூறக் கூடியதாக உள்ளது. ஆரம்பகால மனிதரின் தோற்றம் பற்றியோ, உருவ அமைப்பு பற்றியோ எதுவித விடயங் களையும் அறிய முடியவில்லை. ஆனால் இவர்கள் கற்கருவிகளைப் பாவித்து, தங்களது வாழ்க்கையை நடாத்தியிருக்கின்றார்கள் என்பதை மட்டுமே தொல்லியல் ஆய்வுகள் காட்டி நிற்கின்றன.

இலங்கையின் ஆதிகால மக்கள் பற்றித் தீவிர ஆய்வுகள் கடந்த 50 வருடங்களாக நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ் ஆய்வு முயற்சியில் சில மேலைத்தேசப் பல்கலைக் கழகங் களும், யுனெஸ்கோ நிறுவனமும், இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களும், தகுதி பெற்ற தொல்லியலாளர்களும் ஈடுபட்டு வருவதைக் காணமுடிகின்றது. இவர்கள் மேற்கொண்ட ஆய்வுகளுளின் அறிக்கைளும், தொல்லியல் சான்றுகளும், கல்வெட்டுகளும், புராதன இலக்கி யங்களாகக் காணப்படுகின்றன.

இச்சந்தர்ப் பத்தில், அண்மைக் காலமாக இலங்கையிற் குறிப்பாக, வடக்கு, கிழக்கு, வட மேற்குப் பிரதேசங்களில் இடம்பெற்ற சில முதன் மையான அகழ்வாராய்ச்சி முயற்சிகள் பற்றியும், ஒரு சிலரால் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வுகள் பற்றியும் சுருக்கமாகக் குறிப்பிடுவது அவசிய மாகின்றது.

1970களில், அமெரிக்க பென்சில்வேனியாப் பல்கலைக்கழகம் இலங்கையின் வடக்கு, வடமேற்குப் பகுதிகளில் ஆய்வொன்று மேற் கொண்டது. இந்த ஆய்வுகள் கந்தரோடையிலும், பொம்பரிப்பிலும் கலாநிதி விமலா பெக்லி தலைமையின் கீழ் முறையே நடைபெற்றன. 1980 81 களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வர லாற்றுத் துறையினர், பேராசிரியர் இந்திரபாலா அவர்களின் தலைமையின் கீழ், ஆனைக் கோட் டையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அகழ்வாராய்ச்சியொன்றை நடாத்தினர். 1988 1991 களில் இலங்கை களனிப் பல்கலைக் கழகத்தின் தொல்லியல் ஆய்வு நிறுவனம், இப்பன்கட்டுவ என்னும் இடத்தில் பேராசிரியர் ஸேனக பண்டாநாயக்க தலைமையில் அகழ்வாய்வை நடாத்தியது. 1981ல் யுனெஸ்கோ பண்பாட்டு முக்கோணவலயத் திட்டத்தின் கீழ் அனுராதபுரம், பொலன்னறுவை, சிகரியா ஆகிய இடங்களில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப் பட்டன.

198084 இல் அமெரிக்க சிக்காகோ பல்கலைக் கழகம் மன்னாரில் உள்ள மாதோட்டப் பகுதியில் அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டது. 199091 பிரித்தானிய தொல்லியலாளர்களாகிய பேராசிரியர் என்.ஆர். அல்ச்சின், கலாநிதி ரொபின் கோவிகாம் தலைமையில் அனுராத புரத்தில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 19721990 இல் தொல்லியலாளர் ஸிரான் தரணியகல அனுராதபுரத்தில் பல ஆய்வுகளை நடத்தியிருக்கின்றார்.

இவ் அகழ்வாராயச்சிகளைவிடக் கடந்த சில தசாப்பதங்களாக சில முக்கியமான மேலாய்வு களும் தொல்லியலாளர்களால் மேற் கொள் ளப்பட்டு வருகின்றன. இவ் அகழ்வாராய்ச்சிகள், மேலாய்வுகள் மூலம் பல்வேறுபட்ட தொல்லியற் சான்றுகள், தடயங்கள், முத்திரைகள், நாண யங்கள் ஆகியன கிடைத்திருக்கின்றன. இதே போன்று தென்னிந்தியாவிலும் அகழ் வாராய்ச்சி களும் மேலாய்வுகளும் நடைபெற்றிருக்கின்றன. பல தரவுகளும், தடயங்களும் கிடைத்திருப்பது இவ் ஆய்வைப் பொறுத்து மிக முக்கிய மாகின்றது.

குறிப்பாக, கற்காலமனிதர் இலங்கைப் பிராந்தியத்தில் வடக்கு, வடமேற்கு, வடகிழக்குப் பகுதிகளில் பயன்படுத்திய கற்கருவிகளும் தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில், திருநெல்வேலிக் கரையிற் பயன்படுத்திய கற்கருவிகளும் அனேகமாக ஒரே தன்மையு டையனவாகக் காணப்படுகின்றன. இதனால் இப் பிரதேசங்களில் வாழ்ந்த ஆதி மக்கள் கூடுதலாக

ஒத்த தன்மை கொண்ட பண்பாடு உடையவர்களாக இருந்திருக்கின்றார்கள் என்பதை அறியமுடிகின்றது. இக் கற்காலப் பகுதியில் இலங்கையில் இவ்வாறான மக்கள் பரவலாக வாழ்ந்திருந்தாலும், வடக்கில் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலும், வடகிழக்கில் மாவலி நதியின் தாழ்வடிநிலப் பகுதிகளிலும் இம் மக்களின் நடமாட்டங்கள் இருந்ததற்கான அறிகுறிகள் காணப்படவில்லை. இதற்கான காரணம், யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கற்காலக் கருவிகளான குறுங்கற் கருவிகளை ஆக்குவதற்கு உகந்த கருங்கற்கள் இல்லாமையும், அங்கு சுண்ணாம்புக்கல் அமைப்புமுறை இருந்தமை யுமே எனக் கருதலாம். நன்னீர் வசதி இல்லா மையாலும் ஆரம்பகால கற்கால மனிதர் அங்கு சென்று வாழ்வதற்கு இரும்புக்காலம் வரை சாத்தியமான சூழ்நிலை உருவாகவில்லை எனக் கொள்ளலாம்.

கற்கருவிகளைப் பயன்படுத்தி நாடோடி வாழ்க்கை கற்கால மனிதர் இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்பு தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் இரும்புக் கருவிகளைப் பயன்படுத்தத் தொடங்கியதை தொல்லியல் சான்றுகள் காட்டி நிற்கின்றன. இரும்பை உபயோகிக்கத் தொடங்கிய காலந்தொட்டு வாழ்ந்த மனிதர், முன்னைய நாடோடி வாழ்க்கையிலிருந்து விலகி ஒரு நிலையான வாழ்க்கையை ஏற்படுத்தி வாழத் தொடங்குவதை அவதானிக்க முடிகின்றது. இவர்கள் இரும்புப் பிரயோகத்தின் மூலம் நிலங்களைப் பண்படுத்தி விவசாயம், வேட்டை, மீன்பிடி போன்ற பல்வேறு தொழிற்றுறைகளில் ஈடுபட்டு வாழ்வதையும் அறிய முடிகின்றது. இவர்கள் உபயோகித்த கருவிகள், உபகரணங்கள் என்பன இவர்கள் வாழ்ந்த நிலையான இடங்களில் அகழ்வாய்வுகள் மூலம் கிடைக்கப்பெற்று இம் மக்களைப் பற்றி அறிய உதவுகின்றன.

இவ் இரும்புக்காலப் பண்பாடு, இற்றைக்குச் சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன் இந்திய தீபகற்பத்தின் மேற்குக்கரை வழியாகத் தென் இந்தியாவிலும், இலங்கையிலும் பரவத் தொடங்கியிருக்கின்றது. இரும்புக்காலப் பண்பாடு, இப் பிராந்திய மக்களிடையே பரவியிருப்பதை ஆய்வாளர்கள் கடந்த 30 ஆண்டு காலப்பகுதியில் ஆய்வுகளை மேற்கொண்டு, அம்மக்கள் பற்றிய விபரங்களை வெளிக்கொண்டு வந்தபோதிலும், அவர்கள் பற்றியும், அவர்களது பண்பாடுகள், இன அடையாளங்கள் பற்றியும், ஆய்வாளர்கள் மத்தியில் சில கருத்து வேறுபாடுகளும் இருப்பதனை அவதானிக்க முடிகின்றது. உதாரணமாக, இக் காலப்பகுதியில் காணப்பட்ட தாழி சவ அடக்க முறையைக் கொண்டு அக்காலம் பெருங்கற்பண்பாட்டுக்காலம் எனப் பரவலான ஆய்வாளர்கள் கருதினர்.

ஆனால் தாழி சவ அடக்கம் இரும்புக்காலப் பண்பாட்டுக் கூறுகளுடன் எப்பொழுதும் காணப்படும் ஒரு பொதுவான பண்பாட்டுக் கூறாக இல்லையென சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இருப்பினும், இரும்புக் காலப் பண்பாடும், பெருங்கற்காலப் பண்பாடும் பெரும்பாலும் அனேக ஒற்றுமை களைக் கொண்டுள்ளது. பெருங்கற்பண்பாடு என்பது, மட்பாண்டத்தில் செய்யப்பட்ட பெரிய தாழிகளில் மறைந்தவரின் உடலைப் போட்டு, அவர் பாவித்த முக்கியமான உபகரணங்களையும் அதனுள் இட்டு நிலத்தில் அடக்கம் செய்யும் முறையாகும். இந்தப்பண்பாட்டுப் பரவல் தென் இந்தியாவிலும், இலங்கையிலும் வாழ்ந்த இரும்புக்காலத்துக்குரிய மக்கள் மத்தியில் மிகவும் செறிவாக உட்புகுந்துள்ளமையையும், அம்மக்கள் அப்பண்பாட்டுக்குரிய மக்களாக மாறுவதையும் காணமுடிகின்றது.

மேலும், இப் பண்பாடு பற்றித் தென் இந்தியாவிலும் இலங்கையிலும், ஆய்வுகளை மேற்கொண்ட ஸூதர்ஸன் ஸெனிவரத்தன அதன் முக்கிய கூறுகளை பின்வருமாறு காட்டியுள்ளார்.

"அடிப்படை உலோகத் தொழில்நுட்பம், இரும்பின் உபயோகம், மட்பாண்டச்

செய்கை உபகரணங்கள், நெற்பயிர்ச் செய்கை உபகரணங்கள், நீர்ப்பாசன

முறைகள், சிறு கைத் தொழில், புதிய

நிலையான ஆரம்பக் குடியிருப்புகள்,

பண்டமாற்று வர்த்தக மையங்கள், குறுநில அரசுகளின் தோற்றம், குதிரையின்

அறிமுகம், புதிய சவஅடக்க முறை என்பனவாகும்"

இவை இப் பிராந்தியங்களில் பல்வேறு இடங்களில் பல்வேறு அளவுகளில் காணப்படுகின்றன. குறிப்பாக இப் பண்பாடு இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன் தொடங்கி கி.மு. 200 வரை படிப்படியாக வளர்ச்சி பெற்று பரவியிருக்கின்றது என்பதை அறிய முடிகின்றது. தென் இந்தியாவில் தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரா போன்ற பிரதேசங்களிலும், இலங்கையில் மன்னர் பகுதியிலும், யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கந்தரோடை, ஆனைக்கோட்டை, வேலனை, காரைத்தீவு ஆகிய பகுதிகளிலும், வடமேற்குக் கரையில் புத்தளம், பொம்பரிப்பு பகுதிகளிலும் கிழக்கில் திருகோணமலை, மட்டக்களப்பு கதிரவெளி, அம்பாறை பகுதிகளிலும் மற்றும் வன்னிப் பெருநிலப் பரப்பில் பூநகரி, முல்லைத்தீவு, வவுனியா, மாமடு, பறங்கியாறு, அனுராதபுரம் போன்ற இடங்களிலும் இப் பண்பாட்டு அம்சங்கள், அப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் மத்தியில் மிகச் செறிவாகக் காணப்படுகின்றன. இப் பிரதேசங்களுக்கு வெளியே இப் பண்பாட்டுக் கூறுகள் மிகவும் அருமையாகவே சில இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மன்னார்ப் பகுதியில் ஏழு தொல்லியற் தளங்கள் இரும்புக்காலப் பண்பாட்டைக் கொண்ட இடங்களாக இதுவரை தொல்லியலாளர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளன. குறிப்பாக மன்னார் பிரதேசத்திலுள்ள மாதோட்டப் பகுதியில் இற்றைக்குச் சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்பே இப் பண்பாட்டைக் கொண்ட மக்கள் வாழ்ந்திருப்பதாகச் சான்றுகள் காட்டி நிற்கின்றன. மாதோட்டம் ஒரு தொன்மையான நகரமாகக் காணப் பட்ட போதும், அங்கு இரும்புக்காலத் தடயங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

புராதன வரலாற்றுக்காலம் தொட்டு இப் பிரதேசத்தின் ஒரு முக்கியத்துவத்தை உணர்ந்து 19801984 களில் சிக்காகோ பல்கலைக்கழகம் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை, எதிர்பாராத அரசியல் நிலை காரணமாக, அவ் ஆய்வு முயற்சி இடைநிறுத்தப்பட்டது. முறையான அகழ்வாராய்ச்சி இப் பிரதேசத்தில் நடத்தப்பட்டால் பல வரலாற்றுத் தடயங்களைப் பெறக்கூடியதாக இருக்கும்.

மன்னார்ப் பிரதேசம் போன்று புத்தளப் பகுதியும் மிக முக்கியமான இரும்புக்காலப் பண்பாட்டு பிரதேசமாகும். குறிப்பாக அலுத்தோமபுவ, கல்லாற்றுப் பகுதியில் உள்ள நோக்கம், மோதரகம் ஆற்றுப் பகுதியிலுள்ள பூக்குளம் போன்றவை இக் காலத்துக்குரிய முக்கிய தொல்லியற் தளங்களாகக் காணப்படுகின்றன. இங்கும் முக்கியமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஆதி இரும்புக்காலத் தளங்களுள் மிக முக்கியமான இடமாகக் கருதப்படுவது வடமேற்கில் அமைந்துள்ள பொம்பரிப்பு ஆகும். இங்கு ஏறக்குறைய 8000 சவ அடக்கங்கள் இருப்பதாக மதிக்கப்பட்டுள்ளது. பொம்பரிப்பில் 1920 களிலிருந்து அகழ்வாராய்ச்சிகள் நடைபெற்றபோதும், 1970களில் அமெரிக்க பென்சில்வேனியப் பல்கலைக் கழகத்தினால் கலாநிதி விமலா பெக்லி தலைமையின் கீழ் நடைபெற்ற ஆய்வு மிகவும் முக்கியம் வாய்ந்தது.

மேலும் முக்கியமான தொல்லியற் தளங்களான பொம்பரிப்புப் பிரதேசத்தை அண்டிய பகுதிகளான கரம்பன் குளம், கொல்லன் கனத்தை, தேக்கம் போன்ற இடங்களும் முக்கியத்துவம் வாய்ந்த அக்காலக் குடியிருப்புக்களாகக் காணப் படுகின்றன. தமிழ்நாட்டின் ஆதிச்சநல்லூர் ஒரு முக்கிய ஆதி இரும்புக் காலக் குடியிருப்பாக 2005இல் நடாத்தப்பட்ட அகழ்வாய்வினால் மேலும் உறுதியாகியுள்ளது. அதற்கு அண்மித்த பகுதியாக இலங்கையின் வடமேற்கில் இருக்கின்ற பொம்பரிப்புப் பிரதேசத்தில் அதே பண்பாடு விரைவாகவும், செறிவாகவும் பரவி யிருப்பதில்

ஆய்வாளர்களுக்கிடையில் முரண் பாடுகள் காணப்படவில்லை.

யாழ்ப்பாணத் தீபகற்பத்தில், கடந்த 30 ஆண்டுகளாகக் கூடுதலான ஆதி இரும்புக் காலத் தொல்லியற் தளங்கள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன. ஆதி இரும்புக் காலத்தில் மிகப் பிரபல்யம் வாய்ந்து விளங்கிய கந்தரோடையில் 1970களில் அமெரிக்கப் பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்து அரும் பொருளகத்தினர் நடத்திய அகழ்வாய்வில் இரும்புக்காலப் பண் பாட்டு எச்சங்கள் பல கண்டுபிடிக்கப் பட்ட தோடு, அவற்றில் காணப்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓட்டின் காலக்கணிப்பும் விஞ்ஞானரீதியாக மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் இவ் ஆய்வின் முடிவுகள் பற்றிய அறிக்கைகள் இன்னமும் வெளியிடப்பட வில்லை. அதேபோன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினர் பேராசிரியர் இந்திரபாலா அவர்களின் தலை மையின் கீழ் ஆனைக்கோட்டையில் அகழ்வா ராய்ச்சியை 1980 களில் நடாத்தினர். அப்போது, ஒரு சவஅடக்கமும், பிராமி எழுத்துப் பொறித்த முத்திரை ஒன்றும் கண்டு பிடிக்கப்பட்டன.

இங்கு அடக்கம் செய்யப்பட்டவர் ஒரு குறு நிலத் தலைவராகக் காணப்பட்டதுடன், வர்த்தக நடவடிக்கைகளிலும் அவர் ஈடுபட்டு இருந்த மைக்கு அவரது முத்திரை சான்று பகர்கின்றது. இம் முத்திரையில் கோவேத என எழுதப் பட்டிருக்கின்றது. பிராமி எழுத்து வடிவத்தில் இது எழுதப்பட்டிருக்கின்றது. கோ என்பது கோ ஆதன், கோபூதி ஆகிய தமிழ்ச் சொற்களுடன் ஒப்பிடக் கூடியதெனப் பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் கணித்துள்ளார். துரதிர்ஷ்டவசமாக இவ் ஆய்வினைத் தொடர அவ்வேளையில் அரசாங்கம் தடைபோட்டிருந்தது.

மேலும் 1981 - 1982 களில் காரைத்தீவுப் (இன்று காரைநகர் என அழைக்கப்படும்) பகுதியிலும், சந்திரத்தை, வேலனை போன்ற இடங்களிலும் பேராசிரியர் ரகுபதி மேற் கொண்ட மேலாய்வுகள் மூலம் இரும்புக் காலப் பண்பாட்டுத் தடயங்கள் கண்டறியப் பட்டுள்ளன. அதேபோன்று, 2004களில் கலாநிதி புஷ்பரத்தினம் தனது மேலாய்வுகள் மூலம் சாட்டியிலும், பூநகரிப் பகுதிகளிலும் குறிப்பாக மண்ணித்தலை, கல்முனை, வெட்டுக்காடு, பள்ளிக்குடா, ஈழவூர் பகுதிகளிலும் இருந்து இப் பண்பாட்டுக்குரிய தடயங்கள் பலவற்றைக் கண்டறிந்துள்ளார்.

பாக்கு நீரிணை சேதுசமுத்திரம் வழியாகத் தமிழ் நாட்டிலிருந்து பரவிய இவ் இரும்புக்காலப் பண்பாட்டுச் செல்வாக்கு, நதியோரம் வழியாக இலங்கையின் பல்வேறு இடங்களுக்கும் பரவியதுபோல, பறங்கியாறு வழியாக வவுனியா மாவட்டத்திலும் பரவியமையைக் காணலாம். கிழக்கில் பாயும் மாஓயா, யான் ஓயா வழியாகவும் வவுனியா மாவட்டத்திற்கு இப் பண்பாட்டுச் செல்வாக்கு பரவும் வாய்ப்பு இருந்திருக்கின்றது. மாமடுவில் பெருங்கற்களால் அமைக்கப்பட்ட இரு பெரும் சவ அடக்கங்கள் கண்டுபிடிக் கப் பட்டுள்ளன. இவை இதுவரை இலங்கையில் வேறெங்கும் கண்டறியப்படாத தனித்துவமுள்ள கல்வட்ட சவ அடக்கங்கள் என்பதனைப் பேராசிரியர் செனிவரத்ன அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்.

கிழக்கு இலங்கையில் யான் ஓயாப் பகுதியிலேதான் இதுவரை கூடுதலான இரும்புக் காலப் பண்பாட்டுத் தடயங்கள் கண்டறியப் பட்டுள்ளன. தம்மன்னகொடல்ல, குருஹல்ன்ன, வடிகவவ, கொக்கப, திவுல்லவ, ராபாவ போன்ற இடங்கள் முக்கியமான தளங்களாகும். இதை யொத்த சவ அடக்கங்கள், மல்வத்து ஓயாவுக்கு அருகாமையில் மச்சகம என்ற இடத்திலும், தெற்கே, இப்பன்கட்டுவ, மற்றும் பின்வவ ஆகிய இடங்களிலும், கிழக்குக் கரையில் கதிரவெளியி லும் கண்டறியப்பட்டுள்ளன. மேலும், சேருவில என்ற இடத்திலுள்ள பிராமிக் கல்வெட்டு ஒன்று திருகோணமலை மாவட்டத்தில் இந்த சவ அடக்க காலத்தில் தமிழ் இனக்குழுவினர் இருந் தமைக்கு சான்று பகர்கின்றது.

தொடரும்...



நட்பைக் கருவாகக் கொண்ட "மேல்" என்ற திரைப்படத்தின் பாடல்கள் வெளியீட்டு விழா சத்யம் திரையரங்கத்தில் நடந்தது. தயாரிப்பாளர் டி. சுதாகர் வரவேற்றார்.

விழாவில் மிக முக்கிய அம்சமாக பாடல்கள் உருவாவதற்கு உதவியாக இருந்த இசைக் கலைஞர்களை மேடை ஏற்றி, அவர்கள் கரங் களால் இசைத்தட்டுகள் வெளியிடப்பட்டன.

உலக விருதுபெற்ற வலி என்ற குறும்படத் திற்கு இசையமைத்த திரு. உதயன் அவர்கள் இப்படத்திற்கு இசையமைத்திருக்கிறார். மேல் திரைப்படத்தின் சிடி வெளியிட்டபின் இசைய மைப்பாளர் பேசினார்.

"நமது மண்சார்ந்த இசைக்கருவிகளை மீட்டுபவர்கள் மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. நமது பண்பாட்டோடு இயைந்த இசைக்கருவிகளின் ஒலியைப் கேட்பதில் இன்பம். எனது இசைஞானத் தந்தை திரு இளையராஜா அவர்கள் போட்டு வைத்த பாதையில் நான் பயணிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். உலகப் புகழ்பெற்ற இசையமைப்பாளர்களில் ஒன்பதா வது இடத்தில் இருக்கின்ற தமிழர் திரு. இளையராஜா அவர்கள். அவர்களின் வழியில்

# "நமது மண்சார்ந்த இசைக்கருவிகளை மீட்டுபவர்கள் மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு

# "மேல்" திரைப்பட இசைவெளியீட்டு விழாவில் இசையமைப்பாளர் உதயன் பேச்சு



நாங்கள் நடக்கிறோம். இந்தப்படத்திற்கு இசையமைக்கும் பொழுது இசைச் சேர்ப்புப் பணியில் எனக்கு பெரும் உதவிசெய்த திரு. தட்சிணாமூர்த்தி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இசை என்பது ஒரு தவம். ஒரு மனிதன் இசைக்கலைஞர் ஆகிறான் என்றால் அவன் தவம் செய்கிறான் என்றுதான் பொருள். அப்படிப்பட்ட இசைக்கலைஞர்கள், திரு. ஜெயச்சா, திரு. சசி, திரு. இம்மானுவேல், திரு. சேகர், திரு. செபாஸ்டின், திரு. மோகன், திரு. இலட்சுமிநாராயணா, திரு. சம்பத், திரு. குரு, திரு. ராஜூ என்று பலர் இசைக்கருவிகளை வாசித் திருக்கிறார்கள். வாசித்திருக்கிறார்கள் என்பதை விட ஆசிர்விதித்திருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

திரு. சுவாமிநாதன் அவர்களை நான் பாராட்டு கிறேன்.

எனது படைப்புகளில் முதல்முறையாக நான் கிச்சிலி ஒலிப்பதிகவத்தில் எப்படி எனது பாடல்களின் ஒலியைக் கேட்டேனோ அதே ஒலியை இந்தத் திரையரங்கில் கேட்கிறேன். இதைக் கொண்டு வந்தது திரு. மார்க்கஸ் கிருபா கரன் அவர்கள்தான்." என்றார் இசையமைப் பாளர் உதயன்.

நடிகர் அப்புக்குட்டி இதில் நடித்திருக்கிறார். அவர் பேசுகையில், "நட்பு எப்படி வாழ்க்கையில் முக்கிய இடத்தில் வாழ்கிறது என்பதை காட்டும் படம், நல்ல கிளைமாக்ஸ். உயிர் போனாலும்




நான் என்ன வேண்டும் என்று எதிர் பார்த்தேனோ அதை அப்படியே பாடித்தந் திருக்கிறார்கள் பாடகர்கள். இங்கே நான் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது. ஒலிப்பதி வாளரைத்தான். நாங்கள் நூறு இருநூறு டிராக்குகள் எடுத்துக் கொடுத்துவிடுவோம். ஒலிப்பதிவாளர்கள் அவற்றை பலமுறை கேட்டு, மிகச் சிறப்பாக கோர்த்துத் தருகிறார்கள். அவர்களது பொறுமை கடலினும் பெரிது என்றுதான் சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட பணியைச் செய்த திரு. மார்க்கஸ் கிருபாகரன்,

அவனது நட்பு அவனைச் சுற்றிக்கொண்டே இருக்கும் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்பட்ட படம்" என்றார்.

சிறந்த இயக்குநரான திரு. எஸ். எஸ். ஸ்டான்லி அவர்கள் வாழ்த்தும்பொழுது, "தலைப்பு, ஆணைக் குறிப்பதாகவும், மேல்நோக்கு என்பதைக் குறிப்பதாகவும் உள்ளது. இசைக் கலைஞர்களைக் கொண்டு வெளியிட்டிருப்பதும் வித்தியாசம், ஒரு இயக்குநரே நிகழ்ச்சித் தொகுப்பாளராக இருந்து நம்பிக்கையுடன் இந்த

விழாவை நடத்துவதும் வித்தியாசமாக இருக்கிறது. இவர்கள் வெற்றிபெற, படம் வெற்றி பெற வாழ்த்துகிறேன்" என்றார்.

படத்தின் நாயகன். புஷ்கின் ராஜ்குமார் பேசுகையில், "இந்தப்படம் எப்படி வரப்போகிறது என்பதில் நான் மிகுந்த ஆர்வமாக இருக்கிறேன். வாழ்த்தியவர்களுக்கு நன்றி! எனக்காக எல்லோரும் இறைவனிடம் வேண்டிக்கொள்ளுங்கள், நன்றி!" என்றார்.

இயக்குநர் திரு. அருள் அவர்கள் படத்தைப் பற்றிக் கூறுகையில், "காதல் சம்பந்தம் இல்லாத நட்புப்படம் வந்ததில்லை என்று நினைக்கிறேன். இது அப்படிப்பட்ட படம். பொதுவாக ஆண், பெண்களில் நட்பை இறுதிவரை கொண்டு வருவது ஆண்கள்தான். பெண்கள் திருமணமான பிறகு நட்பை தொடர இயலாமல் போய்விடுகிறது. அவர்களுக்கு இது ஒரு ஆதங்கமாக இருக்கிறது. இப்படம் ஆண்களின் சிறந்த நட்பைச் சொல்லுகிற படம். இதில் ஆபாசம் கிடையாது. சினிமாத்தனம் இல்லை. மேக்கப் இல்லை. ஆனால் மேக்கப் மேன் இருக்கிறார். திரைப்படத்திற்கு ஒலி, ஒளி மிகவும் முக்கியமானதாகும். ஒலியைத் தருகிற இசைக்கலைஞர்களை வைத்து இந்தப் பாடல்களை வெளியிட்டிருக்கிறோம். திரு. மார்க்கஸ் கிருபாகரன் அவர்கள் ஒலியை முழுவதுமாக கவனித்துக் கொண்டார்கள். படம் வெளிவந்ததும் சவுண்ட்ஸ் சிறப்பாகப் பேசப்படும் என்றார்.

தொழிலதிபரும், கிறித்தவ நல்லெண்ண இயக்கத் தலைவருமான திரு. இனிகோ இருயராஜ் அவர்கள், "இந்தப் படம் நட்பின் அடிப்படையில் எடுக்கப்பட்ட படம் என்று சொன்னார்கள். நானும் நீங்கள் சற்று முன்னால் திரையிட்ட பாடலையும் சில காட்சிகளையும் பார்த்தேன். நான் கூட நட்பைப் போற்றும் விதமாகத்தான் இந்த விழாவில் கலந்து கொண்டுள்ளேன். இத்திரைப்படத்தின் நாயகன், புஷ்கின் இராஜ்குமாரின் தந்தை ஜான் அவர்கள் எனது இனிய நண்பர். அவரது நட்புக்காவே நான் வந்தேன். புஷ்கினையும் எனக்குத் தெரியும், இவரா இவ்வளவு அருமையாக நடிக்கிறார் என்ற வியப்பு எனக்கு ஏற்பட்டது. இவர் மேலும் மேலும் வளர வேண்டும். படத்தின் தலைப்புப் போல மேலான இடத்திற்கு மேலும் மேலும் செல்ல வேண்டும் என்று வாழ்த்துகிறேன். நானும் இப்படத்தின் தயாரிப்பாளரும் ஒரே மாதிரி இருக்கிறோம் என்று இங்கு மூன்று நான்கு பேர் சொல்லிவிட்டார்கள். உலகில் ஏழுபேர் ஒரே மாதிரியாக இருப்பார்கள் என்று சொல்லுவார்கள். அந்த வகையில் என்னைப் போல் ஒருவரை இங்கே நான் பார்த்ததில் எனக்கு மகிழ்ச்சி. இந்தவிழாவின் பின்னணியில் இருந்து உழைத்தவர்களுக்குச் சிறப்புச் சேர்க்கும் விதமாக அவர்களை மேடைக்கு அழைத்து அவர்களை முன்னிலைப்படுத்தி, அவர்கள் கரங்களால் இந்த பாடல்களை வெளிட்ட இயக்குநர் அருள், தயாரிப்பாளர் சுதாகர், பாஸ்கர் ஆகியோரை நான் உளம் கனிந்து பாராட்டுகிறேன். இத்திரைப்படம் நூறு நாட்களையும் கடந்து வெற்றிகரமாக மக்களின் ஆதரவைப்பெற வாழ்த்துகிறேன்" என்று வாழ்த்திப் பேசினார்.

இவ்விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும், மக்கள் தொடர்பு ஆளுமையான திரு. நிகில் முருகன் அவர்கள் சிறப்பாகச் செய்திருந்தார்.

விழாவிற்கான அழைப்பிதழ் கொடுக்கப்பட்ட போது, அழைக்கப்படுகிறவர்கள் அனைவரையும் சிறப்பு அழைப்பாளர் என்று விழித்தும், அவர்களது புகைப்படம் பொறிக்கப்பட்ட பேனா கொள்கலன் ஒன்றை அழைப்பிதழுடன் தந்தது சிறப்பாக இருந்தது. திரு. பார்த்திபன் அவர்கள் அவரது ஒரு படத்திற்கு மஞ்சள் கிழங்குடன் தாலிக்கயிறை இணைத்த அழைப்பிதழ் கொடுத்தார். இதைப்போன்ற சிந்தனைகள் கொண்டவர்கள் சமூகத்தின் மேல் அக்கறை கொண்டவர்களாக இருப்பார்கள் என்பது தெளிவான ஒன்றாகும்.

இயக்குநர் அருள் அவர்களும் அத்தகைய சமூக நற்சிந்தனை உள்ளவராக இருக்கிறார். இவரது படைப்புகள் அனைத்தும் வெற்றி பெற விழாவிற்கு வந்திருந்த அனைவரும் வாழ்த்தினர்.

— **உமா மகேஸ்வரி**

# புலத்தில் வாழும் இலட்சியவாதிகளும், தன்மானத் தமிழர்களும் இணைவதை யாராலும் தடுக்க முடியாது



**கலாநிதி இராம் சிவலிங்கம்**

விலங்குகள் அகற்றப்பட்டு விடுதலையான எம் ஈழத்தாயின் மடியிலே; உங்களோடு சேர்ந்து நானும் அயர்ந்து உறங்க வேண்டும் என்ற ஆவலில்தானே எமது அரசியல் போரை முன் னெடுத்துச் செல்லவல்ல தகமையும், தகுதியும் கொண்ட தன்மானத் தமிழரை இணைந்து செயற்பட வருமாறு பல முறை அறைகூவினேன்.

நீதி வேண்டும் உலகம் எமக்காக போராடும் போது, எமது பங்கை நாம் செய்யத் தவறினால், எமது சந்ததி எம்மை மதிக்குமா அல்லது மன் னிக்குமா? என் வருந்தியவேளை சிங்கள அரசின் அறிக்கை வெளியானது.

பதினாறு அமைப்புக்களையும், அவற்றைச் சார்ந்த நானூற்றி இருபத்தி நான்கு உறுப்பி னர்களையும் பயங்கரவாதிகள் என சித்தரிக்கும் சிங்கள அரசின் பட்டியலில்; தேவை காரணமாக சிலர் சேர்க்கப்பட்டதும், அதிலும் மேலான காரணத்திற்காக பலர் நீக்கக்கப்பட்டதும் ஆச்சரிய மானதல்ல.

ஆனால், இந்த அறிக்கையும் பட்டி யலும், சிங்கள அரசின் பதட்ட நிலையை தெளி வாகக் காட்டியதுதான் ஆச்சரியமானது.

எமக்குத் தேவையான அடையாளத்தை முள்ளிவாய்க்கால் தந்து ஐந்து ஆண்டுகளாகியும் தேசமீட்புக்கான எதையுமே செய்யாது, மற்றவர் களையும் செய்யவிடாது, புலம்பெயர் மக்களின் உணர்வுகளைக் கட்டிப்போட்ட இந்த அணி களும், அதன் தலைமைகளும் பயங்கரமான கில்லாடிகளேயன்றி அவர்கள் பயங்கரவாதிகள் அல்ல என்ற உண்மையைக்கூட இந்த சிங்கள அரசால் புரிய முடியவில்லையா?

ஆண்டுக்கு ஒரு மகாநாடும், வருடத்திற்கு இரண்டு இராப் போசனமும் நடாத்துவதே தேசமீட்புக்கான அரசியல் போராட்டம் என் நம்பி செயற்படும் அந்த அப்பாவிகள் பயங்கரவாதிகளா?

சிங்கள அரசின் பட்டியலில் குறிப்பிட்ட அமைப்புக்களும், சங்கங்களும் அதில் அங்கம் வகிக்கும் தமிழர்களும் பயங்கரவாதிகளென் றால்; அவர்களுக்கு தஞ்சம் கொடுத்த நாடுக ளையும், அந்த அமைப்புகளை சட்டபூர்வமாக இயங்க. அனுமதி வழங்கிய அரசுகளையும் மனி தமே இல்லா சிங்கள அரசு அவமதிப்பதாக உங்க ளுக்குத் தோன்றவில்லையா?

ஐ.நா.சபையின் மனித உரிமை மீறலுக்கான சர்வதேச விசாரணை தீர்மானமாகியது கண்டு கலங்கி, தடுமாறி நிற்கும் சிங்கள அரசு, போர்க்குற்ற விசாரணைக்கான தீர்மானம் ஐ.நா.வில்

நிறைவேறும்போது என்ன செய்யப் போகிறார்கள்? ஓடி ஒழிவார்களா அல்லது ஓலமிட்டு ஒப்பாரி வைப்பார்களா?

வெளிநாட்டு தமிழர்களை பயமுறுத்தி விரட்டிவிட்டு, வாழ்வாதாரமற்று வாழத் துடிக்கும் எம் ஈழம்வாழ் உறவுகளை தனிமைப் படுத்தி, அடக்குமுறை மூலம், பயங்கரவாதம் என்ற ஆயதத்தால் அவர்களை அழிக்க சிங்கள அரசு வகுத்த திட்டத்தில் ஒன்றே இந்த அறிக்கையும், பட்டியலுமாகும்.

இதில், எதுவுமே பலிக்காது என்பதை இந்தக் கொடியவர்கள் அறியும் நாள் வெகு தொலைவில் இல்லை. கலியுக காலம் என்றாலும் அதற்கும் ஓர் எல்லை உண்டல்லவா.

தாம் தமிழர் என்பதை அடியோ மறந்து, ஆங்கிலத்தில் பேசி, சிங்களத்தில் சிரித்து, சிங்களவரோடு, சிங்களவராய் வாழ்ந்த கொழும்புத் தமிழர்களுக்கு சிங்கள அரசுகள் கற்பித்த பாடத்தை யாரால் மறக்க முடியும்? தமிழராய் பிறந்த ஒரே காரணத்திற்காக இனக்கலவரம் என்ற போர்வையிலே, சிங்கள காடையரின் உதவியுடன். காலத்துக்குக் காலம், சிங்கள அரசும், அதன் படைகளும் நடாத்திய இன அழிப்பின் எதிரொலியே இன்று நாம் காணும் ஈழம்வாழ் உறவுகளின் இணையில்லா ஒற்றுமை.

வெளிநாடிடில் செயற்படும் புலம்பெயர் தமிழர்களையும், அவர்களின் அமைப்புக்களையும் எதிரியாகப் பார்க்கும் இந்த அரசும் எமக்குள் ஓர் புரிந்துணர்வை ஒற்றுமையை கொண்டு வருவது நிச்சயம். புலத்தில் வாழும் இலட்சியவாதிகளும், தன்மானத் தமிழர்களும் இணைந்து செயற்படுவதை யாரால் தடுக்க முடியும்? நன்றி.

**கலாநிதி இராம் சிவலிங்கம்**
sivalingham@sympatico.ca

---

சென்னை சென்ட்ரல் தொடர்வண்டி நிலையத்தில் நடந்த குண்டு வெடிப்பை பக்கத்து நடைமேடையில் இருந்து பார்த்த, தூத்துக்குடி நாசரேத் நகரைச் சேர்ந்த சுதா ஜெபக்குமார் என்ற பெண் உடனடியாக 108 க்குப் பேசி அவர்களை வரவழைத்திருக்கிறார்.

இவர் இவ்வாறு உடனடியாக செய்த, பலன் பாராத உதவியினால் 10க்கும் மேற்பட்ட உயிர்கள் பாதுகாக்கப் பட்டிருக்கின்றன.



இவர் ஒரு நர்ஸ் என்பதால் 108 ஊழியர்களுடன் சேர்ந்து காயப்பட்டவர்களை மருத்துவமனை கொண்டு செல்ல உதவி செய்து, மருத்துவமனை வரை சென்று அவர்களுக்கு சேவை செய்ததை நல்ல இதயம் படைத்தவர்கள் பாராட்டினார்.

அவர் இதுபற்றிப் பேசும்போது, சுமை தூக்கும் தொழிலாளகள் (போர்ட்டர்கள்) பலர் ஓடி வந்து உதவிசெய்தனர் என்றார். ஏழை இதயங்கள் என்றுமே ஈரமாகத்தான் இருக்கின்றன.

எஸ். கண்ணபெருமாள்.

# முல்லைப்பெரியாறு தீர்ப்பு: தமிழக உரிமைப் போராட்டத்தின் வெற்றி


2006ஆம் ஆண்டு பிப்ரவரி 27ஆம் நாள் உச்சநீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்களின் அமர்வு, முல்லைப்பெரியாறு அணையில் நீர்மட்டத்தை 142 அடிக்கு உயர்த்தலாம் என்று தீர்ப்புத் தந்தது. அந்தத் தீர்ப்பை கேரள அரசு மதிக்கவில்லை. தமிழக அரசும் அந்தத் தீர்ப்பைப் பெற்று நீர்மட்டத்தை உயர்த்த கடுமையான நடவடிக்கைகளிலும் இறங்கவில்லை.

மிதப் போக்கையே கடைபிடித்து வந்தது. கேரள அரசோ அணையை உடைப்போம், புதிய அணையைக் கட்டுவோம் என்று பாய்ச்சல் காட்டி வந்தது. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகளுக்கு எதிராக சட்டசபையிலேயே தீர்மானங்களை இயற்றியது. அணை பாதுகாப்பு திருத்தச் சட்டம் ஒன்றை நிறைவேற்றியது. கேரள அரசின் முடிவுகளில் அண்டை மாநிலங்கள் தலையிடக் கூடாது என்று அந்தச் சட்டத்தில் தெரிவிக்கப் பட்டிருந்தது. புதிய அணை கட்டுவதற்கும் அந்தச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருந்தது. இந்தச் சட்டங்களை எதிர்த்து தமிழக அரசு மீண்டும் உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது.

ஆனால் அணை பலவீனமாக இருக்கிறது என்று கேரள அரசின் தரப்பில் கூறப்பட்டது. உச்சநீதிமன்றம் அணையை ஆய்வு செய்ய நீதியரசர் ஏ.எஸ்.ஆனந்த் தலைமையில் குழு ஒன்றை அமைத்தது. அந்தக்குழுவும் அணையை ஆய்வு செய்தது. நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தினால் எந்தவித பாதிப்பும் அணைக்கு ஏற்படாது என்று தெரிவித்தது.

கேரள அரசோ புதிய குழுவை அமைக்கு மாறு கூறியது. உச்சநீதிமன்றமோ கேரளத்தைக் கண்டித்து, தீர்ப்பை ஒத்திவைத்தது. ஏழாம் தேதி உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் லோதா, நீதியரசர்கள் தத்து, சந்திரமவுலிகுமார் பிரசாத்,





லோகுர், இக்பால் ஆகியோர் அடங்கிய அரசியல் சாசன அமர்வு தீர்ப்பு வழங்கியது.

முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 142 அடியாக உயர்த்திக் கொள்ள லாம் என்றும், கேரள அரசு நிறைவேற்றிய சட்டம் செல்லாது என்றும் நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினர்.

மேலும் அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தவும் அணையை பலப்படுத் தும் பணி முடிந்த பிறகு நீர் மட்டத்தை 152 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் என்றும் 27.02.2006 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பை மீண்டும் ஆய்வு செய்ய வேண்டியது இல்லை. தமிழ்நாடு தரப்பில் அணையில் பழுது பார்க்கும் வேலையைச் செய்ய கேரளா எந்த வகையிலும் குறுக்கிடவோ, தடை விதிக்கவோ கூடாது.

முல்லைப் பெரியாறு அணை வலுவாக உள்ளது. இருந்தாலும் அணையில் நீரின் மட்டத்தை 142 அடியாக உயர்த்துவதில் கேரளா வுக்கு இருப்பதாகக் கூறப்படும் அச்சத்தைத் தவிர்க்கும் வகையில், அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தும் பணியைக் கண்காணிக்க மூன்று உறுப்பினர்களைக் கொண்ட கண்கா ணிப்புக்குழு நியமிக்கப்படும்.

மூன்று உறுப்பினர்கள் கொண்ட குழுவின் உறுப்பினர்களாக நடுவண் நீர்வள ஆணையத் தின் சார்பில் ஒரு பிரதிநிதியும், கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களின் சார்பில் தலா ஒரு பிரதிநிதியும் இடம் பெறுவார்கள். இந்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகம் கேரளாவில் இருக்கும்.

இந்தக் குழுவுக்கான அனைத்துச் செலவுகளையும் தமிழ்நாடு ஏற்கும். இந்தக் கண்காணிப்புக் குழு முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 142 அடியாக உயர்த்தும் பணியை கண்காணிப்பதோடு, குறிப்பிட்ட கால இடைவெளியில் அணையில் ஆய்வு மேற்கொள்ளும். குறிப்பாக மழைக்காலத் திற்கு முன்பும், மழைக்காலத்திற்குப் பிறகும் ஆய்வுகள் மேற்கொண்டு, தேவைப்பட்டால் மேற் கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக் கைகளை பரிந்துரைக்கும்.

அந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை தமிழக அரசு நிறைவேற்றும். நெருக்கடியான சூழ்நிலைகளில் அணையின் பாதுகாப்புக் குறித்து தமிழ்நாடு, கேரளா ஆகிய இரு மாநிலங்களுக்கும் இந்தக் குழு தேவையான வழிகாட்டுதல்களைப் பரிந்துரைக்கும். இந்த வழிகாட்டுதல்களை இரு தரப்பும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மத்திய நீர்வள ஆணையம் மற்றும் அணைக்கட்டு பாதுகாப்பு அமைப்பு வழிகாட்டு தலின் அடிப்படையில், முல்லைப்பெரியாறு அணையின் பாதகாப்புக்காகத் தேவைப்படும் பட்சத்தில் தமிழ்நாடு அவ்வப்போது மேற்கொள் ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இந்தக் கண்காணிப்புக்குழு அனுமதிக்க வேண்டும். என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து கேரளாவில் எட்டாம் தேதி அன்று அனைத்துக் கட்சிகளும் வேலை நிறுத்தப் போராட்டத்தை அறிவித்தி ருக்கின்றன.

முல்லைப் பெரியாறு அணையைக் காப்பாற்ற தமிழ்நாட்டில் பல போராட்டங்கள் நடந்தன. தமிழகத் தலைவர்களில் வைகோ பல போராட் டங்களை நடத்தினார். ஜெயப்பிரகாஷ் நாராய ணன், இடிமுழக்கம் சேகர், சின்னமனூர் இராமமூர்த்தி ஆகிய மூவர் தங்களது உயிரை பலியாக்கினர்.

பல தமிழ் அமைப்புகள் போராடின. இவை எல்லாவற்றிற்கும் பலனாகத் தான் இந்தத் தீர்ப்பு கிடைத்திருக்கிறது. தீர்ப்பு வெளிவந்ததும் தமிழகம் விழாக்கோலம் பூண்டது.

◆

# புரட்சிக்கவி

7

பாரதிதாசனார்



புரட்சிக்கவிஞர்

'கொலைஞர்கள் வருக' என்றான் – அவன்
கூப்பிடு முன்வந்து கூடிவிட்டார்.
'சிலையிடை இவனைவைத்தே – சிரச்
சேதம் புரிக 'எனச் செப்பிடுமுனம்
மலையினைப் பிளந்திடும்ஓர் – சத்தம்
வந்தது! வந்தனள் அமுதவல்லி!
'இலைஎனக் கதிகாரம் – அந்த
எழிலுடை யான்பிழை இழைக்கவில்லை.

ஒருவனும் ஒருத்தியுமாய் – மனம்
உவந்திடில் பிழையென உரைப்பதுண்டோ?
அரசென ஒருசாதி – அதற்
கயலென வேறொரு சாதியுண்டோ?
கரிசன நால்வருணம் – தனைக்
காத்திடும் கருத்தெனில், இலக்கணந்தான்
தரும்படி அவனைஇங்கே – நீ
தருவித்த வகையது சரிதானோ?

என்மனம்காதலனைச் – சென்
றிமுத்தபின் னேஅவன் இணங்கினதால்
அன்னவன் பிழையிலனாம்! – அதற்
கணங்கெனைத் தண்டித்தல் முறையெனினும்,
மன்னநின் ஒருமகள்நான் – எனை
வருத்திட உனக்கதி காரமில்லை!
உன்குடிக் கூறிழைத்தான் – எனில்
ஊர்மக்கள் இடம்அதை உரைத்தல்கடன்!'

என்றபற் பலவார்த்ததை – வான்
இடியென உரைத்துமின் னெனநகைத்தே
முன்னின்ற கொலைஞர்வசம் – நின்ற
முழுதுணர் கவிஞனைத் தனதுயிரை
மென்மலர்க் கரத்தாலே – சென்று
மீட்டனள் வெடுக்கெனத் தாட்டிகத்தால்,
மன்னவன் இருவிழியும் – பொறி
வழங்கிட எழுந்தனள், மொழிந்திடுவான்:

தொடரும்...






# தகவல் அறியும் உரிமைச் சட்டம்

சட்டப்படி செயல்படாமல் தூங்கி வழியும் தகவல் ஆணையத்தை தட்டி எழுப்ப, மாநிலத் தகவல் ஆணையம் முன்பு பாய்விரித்துத் தூங்கும் போராட்டம், கடந்த 28ஆம் தேதி சட்டப் பஞ்சாயத்து அமைப்பின் தலைவர் திரு. சிவ இளங்கே அவர்கள் தலைமையில் நடந்தது. அமைப் பின் செயலர் திரு. செந்தில் ஆறுமுகம், திரு. இராஜேஷ், சிவகங்கை மாவட்ட உறுப்பினர் வேல்பொன்முடி உட்பட இவ்வமைப்பின் உறுப்பி னர்கள் ஏராளமானவர் கள் கலந்து கொண்டனர்.

ஆம்ஆத்மி கட்சியினரும், அக்கட்சியின் சார்பில் தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்ட திரு. ஜாகிர்உசேன் அவர்களும் கலந்துகொண்டனர். போராட்டம் நடத்தியவர்கள் கைதுசெய்யப்பட்டு தேனாம் பேட்டை பாரதிதாசன் சாலையில் உள்ள சமூக நலக்கூடத்தில் அடைக்கப்பட்டு மாலை 6 மணிக்கு விடுதலை செய்யப்பட்டனர்.

தகவல் ஆணையம் சட்டப்படி செயல்பட, சட்டப்பஞ்சாயத்து இயக்கம் முன் வைத்த கோரிக்கைகள்:

தகவல் ஆணையத்திற்கு வரும் மனுதாரர் களுக்கு வரிசை எண் கொடுக்கப்பட்டு மனு தாரருக்குத் தெரிவிக்க வேண்டும். மேலும் ஆணையத்தில் தற்போது விசாரணை செய்யப் பட்டு வரும் வழக்கு எண் உள்ளிட்ட தகவல்களை மனுதாரருக்குத் தெரிவிக்க வேண்டும்.

மனுதாரர்கள் வழக்கு நிலையைத் தெரிந்து கொள்ள அண்டை மாநிலங்களில் உள்ளது போல் இணையதள வசதிகள் செய்யப்பட வேண்டும். மேலும் வழக்கு எண்ணை எஸ் எம் எஸ் மூலம் மனுதாரர் அனுப்பினால் மீண்டும் எஸ் எம் எஸ் மூலம் மனுதாரருக்குத் தெரியப் படுத்த வேண்டும்.

அண்டை மாநிலங்களில் உள்ளது போல் ஆணையத்தின் இணையதளம் தாய்மொழியான தமிழிலும் இருக்க வேண்டும்.

ஆணையத்தின் ஆண்டறிக்கை ஒவ்வொரு ஆண்டும் சட்டசபையில் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வறிக்கையை மாநிலத் தகவல் ஆணைய இணையதளத்திலும் வெளியிட வேண்டும்.

100 நாட்களுக்கு மேலாகியும் எந்தத் தகவலும் கொடுக்காத பொதுத் தகவல் அலுவலர் மீது சட்டப்படி ரூ.25000 அபராதம் விதிக்க வேண்டும். அபராதம் விதிக்கப்பட்ட பொதுத் தகவல் அலுவலர்களின் பெயர்ப்பட்டியல் துறை வாரியாக பதவி, அபராத விபரங்களை அண்டை




மாநிலங்களில் இணையதளத்தில் வெளியிடுவது போல் தமிழக தகவல் ஆணைய இணைய தளத்திலும் வெளியிட வேண்டும்.

மனுதாரர்கள் ஆணைய வளாகத்திற்குள் வாகனங்களை நிறுத்த அனுமதிக்க வேண்டும். தகவல் ஆணையம் நீதிமன்ற நடைமுறைகளுக்கு உட்பட்டு வராது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்திருந்தும் மாநில தகவல் ஆணையம் மனுதாரர்களை அடிமைகளாக நடத்துகின்றனர். மனுதாரர்களை ஒருமையில் பேசித் திட்டு கிறார்கள். வழக்கு விசாரணையின்போது நின்று கொண்டுதான் பேசவேண்டும் என ஆண்டான் அடிமைபோல அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள் இந்தப் போக்கை அனைத்து தகவல் ஆணையங்களும் உடனே நிறுத்த வேண்டும்.

புதிதாக நியமிக்கப்படும் ஆணையர்களுக்கு சட்டப் படியான உரிய பயிற்சி அளித்த பிறகு வழக்குகளை விசாரிக்க அனுமதி கொடுக்க வேண்டும். (தற்போது உள்ள ஆணை யர்களுக்கு இச்சட்டத்தைப் பற்றிய போதிய அறிவு இல்லை)

வழக்கு விசாரணை உயர் நீதிமன்றத்தில் உள்ளது போல் அனைவரும் பார்க்கும் வகையில் வெளிப்படையான தன்மையுடன் இருக்க வேண்டும். வழக்கு விசாரணையை இணைய தளத் தின் வழியாக நேரடி ஒளிபரப்புச் செய்ய வேண்டும். அப்போதுதான் ஆணையர் மனு தாரர்களை மிரட்டுவதும் ஒருமையில் பேசுவதும் குறையும். வழக்கும் சட்டப்படி விசாரிக்கப்படும். ஆணையர் செய்யும் தவறுகள் வெளி உலகுக்கு ஆதாரத்துடன் தெரியவரும். அரசு நிர்வாகத்தில் வெளிப்படையான தன்மையை ஏற்படுத்தவே இச்சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆதலால் வழக்கு விசாரணையை வீடியோவாக மற்றும் ஆடியோவாக பதிவு செய்ய மனுதாரரை அனுமதிக்க வேண்டும்.

வழக்கு விசாரணையின்போது 2009 வரை மனுதாரர்கள் தனது உதவிக்காக இருவரை அழைத்துச் செல்லலாம். அதை மாற்றி தற்போது யாரையும் அழைத்துச்செல்ல அனுமதி மறுக்கப் பட்டுள்ளது.

இந்த நிலையை மாற்றி பழைய படியே வழக்கு விசாரணையின்போது இருவரை அழைத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்பது போன்ற சட்டப்படியான நடவடிக்கை களைச் செயல்படுத்தக் கோரி போராட்டம் நடைபெற்றது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை செயல்படுத்துவதிலும் பல குறைகள் இருப்பதை மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது. சட்டப்பஞ்சாயத்து இயக்கம். அதோடு அல்லாமல் அச்சட்டம் சரியான முறையில் செயல்படுத்தப்பட போராடவும் செய்கிறது சட்டப்பஞ்சாயத்து இயக்கம்.

◆ எஸ்.டி.பி.சாமி

# “அண்ணே ரொம்ப நன்றிண்ணே”

முத்தன் என்பது அவனது பெயர். முத்து என்று சிலரும் முத்தா என்று சிலரும் அழைப் பார்கள். அவனுக்கு பல துறைகளைப் பற்றித் தெரியும். பொதுவாக பொதுச்சேவைகளில் ஆர்வம் உள்ளவன். யார் எதைக் கேட்டாலும் அதற்கு ஆள் வைத்திருப்பான். அங்கே ஒருவர் இருக்கிறார் அவரிடம் சொன்னால் அந்த வேலை முடிந்துவிடும் என்பான். முடித்தும் கொடுப்பான். பிறந்த சான்றிதழ் வாங்கவேண்டும் எங்கே செல்வது என்று தெரியவில்லை என்று யாராவது பேசிக்கொண்டிருந்தால், இடையில் புகுந்து விபரம் கேட்டு நான் வாங்கித் தருகிறேன் என்பான். முடிந்தவரை காசு இல்லாமல் எதை யும் செய்யமாட்டான்.

முத்தனின் சிறப்பு என்னவென்றால் இலவசமாக அல்லது சேவையாக செய்து தருகி றேன் என்பது போல் உள் நுழைந்து, கொஞ்சம் கொஞ்சமாக காசு வாங்கிவிடுவான். கொடுப்ப வரை கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்று எண்ணுகிற அளவுக்கு கொண்டு வந்து விடுவான்.

நகரத்தில் இருக்கும் பெரிய மனிதர்கள் என்று கருதப்படுகிற அனைவரது முகவரி களையும் தொடர்பு எண்களையும் கையில் வைத் திருப்பான். அவரைத்தெரியும் இவரைத்தெரியும் என்பான். விசாரித்துப் பார்த்தால் அதுவும் உண்மைதான்.

அவர்களிடம் ஏதாவது சொல்லி நேரடி யாகவே தொடர்பு ஏற்படுத்திக் கொண்டிருப் பான். அல்லது அவருக்குத் தெரிந்த இன்னொரு வர் பெயரைச்சொல்லி தொடர்பை ஏற்படுத்திக் கொள்வான். இப்படியெல்லாம் திறமைகள் இருந்தாலும்கூட ஏனோ அவன் பொருளா தாரத்தில் உயரவில்லை. இவன் வசதியானவன் என்று பறைசாற்றக்கூடிய முகம் அவனுக்கு இல்லை. அவனது உண்மையான நிலையும் அப்படித்தான் இருந்தது. இவன் சம்பாதிக்கிற பணத்தையெல்லாம் என்ன செய்கிறான் என்பது யாருக்கும் தெரியாமலிருந்தது. இவனுக்கு வனஅரசு என்ற நண்பன் இருந்தான். வனஅரசு ஒரு தொழிற்சாலையில் வேலை செய்து வந்தான். நல்ல வேலைக்காரன். அதோடு நம்பிக்கைக்கும் உரியவன். வனஅரசுவின் வேலையையும் அவனது குணத்தையும் கண்ட அந்த தொழிற் சாலையின் முதலாளி வனஅரசுவை அழைத்து, நமது தொழிற்சாலைக்குத் தேவையான உதிரிப் பாகங்கள் செய்வதற்கு சிறிய அளவில் தொழில் செய்கிறவர்களிடம் ஆர்டர் கொடுப்பது உனக் குத் தெரிந்ததுதான். நமது புதிய இயந்திரம் ஒன்றுக்கு சில இணைப்புப் பொருட்கள் செய்ய வேண்டியுள்ளது. நீ அந்தப்பொருட்களைத் தயார் செய்து கொடு! நீயும் ஒரு முதலாளியாக வரவேண்டும்! நீயும் உனது வாழ்க்கையில் உயர்ந்தது போலிருக்கும் என்றார்.

வன அரசுவுக்கோ மிகுந்த மகிழ்ச்சி. தனி யாகத் தொழில் செய்ய வேண்டும் என்ற



எண்ணத்தை பல ஆண்டுகளாக அவன் அடைகாத்து வந்தான். முதலாளியே இவ்வாறு சொன்னதும் அவன் வானத்தில் மிதப்பது போன்ற நிலையை அடைந்தான். சரிங்கய்யா என்று கூறினான். அவரும், நாளை காலை என் வீட்டிலே என்னை வந்து பார் என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

வனஅரசுவுக்கு நிற்க முடியவில்லை. புதிய தொழில் தொடங்க பணம் வேண்டுமே! சேமித்து வைத்திருக்கிற பணம் போதாதே என்ன செய்வது என்று யோசித்த போது அவனது யோசனையில் முன்னே வந்தது முத்தன்தான். உடனே முத்தனை தொடர்பு கொண்டான். பேசினான். முத்தனோ கலைப்படாதே நண்பா, இது நல்ல வாய்ப்பு விட்டுவிடாதே பணத்திற்கு நான் ஏற்பாடு செய்கிறேன். வங்கி அதிகாரிகள் பலரை எனக்குத் தெரியும், அவர்களிடம் கேட்டு கடன் வாங்கிவிடலாம் என்று உற்சாகப்படுத்தினான்.

வனஅரசு தனது நண்பனான முத்தனின் வார்த்தையை நம்பி அடுத்த நாள் காலை முதலாளியின் முன் நின்றான். அவர் வரவேற்று சில ஆலோசனைகள் வழங்கி பணத்தேவை இருந்தால் சொல் நான் உதவி செய்கிறேன் என்றார். வன அரசு நன்றி கூறிவிட்டு வந்தான்.

உடனடியாக ஒரு சிறிய தொழிற்கூடம் அமைக்கும் பணியை ஆரம்பித்தான் வனஅரசு. முத்தனும் அவனுடயே இருந்தான். வனஅரசுவின் தொழிற்சாலைக்கு தன்னால் இயன்ற எல்லா உதவிகளையும் செய்தான். வங்கிக்கடனையும் வாங்கிக் கொடுத்துவிட்டான். மின்சார இணைப்புத் தொடங்கி பல வேலைகளில் முத்தன் உதவியாக இருந்தான். ஒரு செயல் செய்து முடிக்க வனஅரசுவிடம் முதலில் ஒரு தொகையை சொல்வான்.

இறுதியில் இன்னும் இவ்வளவு ரூபாய் கொடுத்தால்தான் வேலை முடித்துக் கொடுப்பார்கள் என்று சொல்வான். அந்தப் பணத்தைக் கொடுத்ததும் அந்த வேலையை சில நாட்கள் கடந்துதான் முடித்துக் கொடுப்பான். ஒரு செயலை உடனடியாக செய்து கொடுத்து விட்டால் அந்த வேலைக்கு மதிப்பு இருக்காது, தனக்கும் மதிப்பு இருக்காது, தான் மிகவும் சிரமப்பட்டு இந்த வேலையை முடித்ததுபோல் காட்டிக்கொள்ள வேண்டும் என்று நினைப்பான் முத்தன்.

வனஅரசு தொழிற்சாலை ஆரம்பித்து நடத்தத் தொடங்கினான். முத்தனோ வந்து போய்க் கொண்டிருந்தான். பணம் இல்லை, மிகவும் சிரமமாக இருக்கிறது என்றான். வனஅரசுவுக்கோ ஒன்றும் புரியவில்லை. இவன் வீட்டுக்கும் பணம் கொடுப்பதில்லை என்று அவன் மனைவி கூறியிருந்தாள். தனது சம்பளத்தை வைத்தும், தந்தை வீட்டிலிருந்து வரும் தானியங்களை வைத்தும் குடும்பம் நடத்தவதாக கூறியிருந்தாள் வனஅரசுவிடம். முத்தனும் அப்படித்தான் சொன்னான். ஆனால் இவன் நம்மிடமே இவ்வளவு பணம் வாங்கியும் ஏன் பஞ்சப்பாட்டுப் பாடுகிறான் என்று முத்தனை பின் தொடர்ந்தான் வனஅரசு.

முத்தனைப் பின்தொடர்ந்த ஆறாவது நாள், அதற்கு விடை கிடைத்தது வனஅரசுவுக்கு. இரண்டு பெண்களிடம் முத்தன் தொடர்பு வைத்திருந்ததை கண்டுகொண்டான். முத்தனிடம் நேரடியாக இதைப்பற்றிக் கேட்டபோது ஒத்துக்கொண்டான். எப்போதோ தான் ஒரு முறை செய்த தவறை அந்தப் பெண்கள் பயன்படுத்திக் கொண்டு அடிக்கடி என்னை மிரட்டி பணத்தை பிடுங்குகிறார்கள் என்று முத்தன் கூறினான்.

தனக்கு உதவி செய்ததற்காக மட்டுமல்ல, நண்பன் என்ற முறையில் அவனை, அந்தச் சிறையிலிருந்து விடுவிக்க விரும்பினான் வனஅரசு. முத்தனுக்குச் தெரியாமலேயே அந்த இரு பெண்களையும் பார்த்தான். பேசினான், பேச வேண்டிய முறையில் பேசி, முத்தனிடம் இனி எந்தப் பேச்சும் வைத்துக்கொள்ளக்கூடாது என்று எச்சரித்துவிட்டு, முத்தனை அழைத்து


விசயத்தைச் சொல்லி இனி நீ அங்கே போகாதே, அவர்கள் ஏதாவது கேட்டால் என்னிடம் சொல். நீயாக எதுவும் சொல்லாதே செய்யாதே என்று அறிவுறுத்தினான்.

எத்தனையோ பேரைத் தெரியும் என்கிறாய், பலருக்கு உதவுகிறாய் உனது சொந்தச் சிக்கலைத் தீர்க்காமல் ஏன் இருந்தாய் என்றான் வனஅரசு.

எனது தவறை பிறர் தெரிந்து கொண்டு விடக்கூடாது என்பதனாலேயே நான் அதை யாரிடமும் கூறாமல் இருந்தேன். இனி அப்படி இருக்கமாட்டேன். இனிமேல் தான் எனது வாழ்க்கையை நான் ஆரம்பிக்கப் போகிறேன். ஒரு ஐநூறு ரூபாய் கொடு! நான் ஏதாவது வாங்கிக்கொண்டு வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்றான். வனஅரசு உடனே ரூபாயைக் கொடுக்க, வீடு நோக்கி விரைந்தான் முத்தன். அவன் சென்று நான்கு மணிநேரத்திற்குப் பின் முத்தன் வீட்டு எண்ணிலிருந்து வனஅரசுவுக்கு அழைப்பு வந்தது. முத்தனின் மனைவி இளந்தளிர் பேசினாள், "அண்ணே ரொம்ப நன்றிண்ணே" என்று கூறிவிட்டு மேலும் பேசினால் எங்கே அழுதுவிடுவோமோ என்ற நினைப்பில் தொலைபேசியை வைத்துவிட்டாள். வனஅரசு வின் மனம் மகிழ்ந்து போனது.

◆ இருங்கோவேள்.

## தெரிந்து கொள்வோம்!



# வாக்கு உரிமையும் தேர்தல் ஆணைய சீர்திருத்தமும்

தமிழகத்தில் வாக்குப்பதிவு நடந்து முடிந்து விட்டது. தென் சென்னைத் தொகுதியில்தான் தமிழகத்திலேயே மிகவும் குறைந்த அளவாக 60.37 விழுக்காடு வாக்குகள் பதிவாகியிருக்கின்றது என்று தேர்தல் ஆணையம் விபரம் கொடுத்திருக்கிறது.

சென்னை மாநகரத்தின் மூன்று தொகுதி களிலும் தான் தமிழகத்திலேயே மிகக்குறைந்த அளவிலான வாக்குகள் பதிவாகியிருக்கின்றன. தர்மபுரியில் 81.14 விழுக்காடு பதிவாகியிருப்பதா கவும் கூறப்பட்டிருக்கிறது. அதிகம் படித்தவர்கள் பணக்காரர்கள் இருக்கும் மாநகரத்தில் மிகக் குறைவாக வாக்குப்பதிவு நடந்திருக்கிறது. காரணம் என்ன? படித்த மேதாவிகளும், பணக்காரர்களும் தான். இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? நம்மிடம் பணம் இருக்கிறது. உழைத்துச் சேர்த்த பணத்தை விட நேரடியாகவும் மறைமுகமாகவும் சாதாரண மக்களின் உழைப்பைக் கொள்ளை யடித்த பணம் இருக்கிறது. அதை வைத்து எதையும் வாங்கலாம், யாரையும் வாங்கலாம் என்ற மிதமிஞ்சிய ஆணவத்தினால் அவர்கள் எல்லாம் வாக்களிக்கவில்லை என்பதுதான் உண்மை. ஒரு சிலர் இந்த வெயிலில் போய் யார் வாக்களிப்பார்கள்? என்ற உடற்பற்றினால் நாட்டுநலனை புறக்கணித்திருக்கிறார்கள். வேறு சிலரோ யாரும் சரியில்லை. ஏன் வாக்களிக்க வேண்டும் என்ற நினைவிலும் இருக்கின்றனர். வாக்களிக்காதவர்களுக்கு ரேசன் பொருட்கள் கொடுக்கக்கூடாது என்று சட்டம் கொண்டு வரலாம் என்பதைவிட, தகுந்த காரணமின்றி வாக்களிக்காதவர்களின் குடியுரிமையையும் சொத்துக்களையும் பறிமுதல் செய்தால் நூற்றுக்கு நூறு விழுக்காடு வாக்குகள் பதிவாகும்.

அரசியல்வாதிகள், நடிகர்கள் இவர்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யும்போது, அவர்கள் பின்னால் சிலர், அவர்கள் வாக்களிப் பதைப் படம்பிடிக்க போட்டோ கிராபார்கள் என்பதெல்லாம் வரம்பு மீறிய செயல்களல்லவா? அவர்கள் வாக்களித்து விட்டு வெளியில் வருகை யில் ஊடக நண்பர்கள் அவர்களிடம் எதை வேண்டுமானலும் பேசலாம்.



எத்தனை படங்கள் வேண்டுமானாலும் எடுக்கலாம். அதை விடுத்து, ஓட்டளிக்கும் அறை யில் படம் பிடிப்பது என்பது சரியான நடை முறையல்ல. வாக்களிக்கச் செல்லும் ஒவ்வொரு வரும் தங்களுடன் சில போட்டோகிராபர் களையும் அழைத்துச் சென்றால் வாக்குப்பதிவு என்னாகும் என்று தேர்தல் ஆணையம் நினைத் துப் பார்க்க வேண்டாமா? நடிகர் விஜயகாந்த் வாக்களிக்கும்போது அவருக்கருகில் அவரது மனைவி அனுமதிக்கப்படுகிறார். ஏன் இந்த ஒழுங் கீனம்? ஒரு மனிதனுக்கு ஒரு வாக்கு என்ற மக்களாட்சி நாட்டில்,

அரசியல்வாதிகளுக்கும், நடிகர்களுக்கும் வாக்களிக்கும் அறையில் சலுகைகளைக் காட்டுவது மக்களாட்சிக்கு எதிரான ஒன்றாகும்.

அதிகாரத்தில் இருப்பவர்கள் வாக்களிக்க வந்தால் அவர்களைக் கண்டதும் அங்கு இருக்கிற அனைவரும் எழுந்து நின்று அவர்களை மதித்து பணிவிடை செய்வதும், சாதாரண மனிதர்களை ஏதோ வேலை முடிந்தால் சரி, வாக்கை அளித்து விட்டுப்போங்கள் என்பதுபோல் பார்ப்பதும் மக்களாட்சியின் நிலை ஆகுமா? வாக்குப் பதிவு அறைக்கு வாக்களிக்க யார் வந்தாலும் ஒரே நடைமுறையைப் பின்பற்ற வேண்டியது அங்குள்ள பணியாளர்களின் பணி. அதை விடுத்து, சிலரிடம் நாங்கள் உங்களை மதிக்கி றோம், உங்களுக்கு மரியாதை செய்கிறோம்.

ஆகவே நீங்கள் ஏதாவது பிச்சை போடுங்கள் என்று கேட்பது போல் இருக்கிறது. சரி அதுதான் போகட்டும். மக்கள் பணி செய்கிறவர்கள், மக்கள் பணிகளைச் செய்வதற்கான வேலையாட்களைத் தேர்ந்தெடுக்கும் இடத்திற்கு வந்து தங்களது வாக்குகளைப் பதிவு செய்கிறவர்கள் குறிப்பாக அதிகாரத்தில் இருப்பவர்களாவது உட்காருங்கள் என்று சொல்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரி யாக மதிக்கிற தலைவர்களை நாடு இழந்து கொண்டே வருகிறது என்பதுதான் உண்மை. பணியாளர்கள், எங்கே தாங்கள் எழுந்து நிற்காவிட்டால், "நான் வாக்களிக்க வரும்போது எழுந்து நிற்காமல் உட்கார்ந்திருந்தானே அவன் யார் அவனை ஏதாவது காரணத்தை ஏற்படுத்தி பணியிலிருந்து விலக்கி விடுங்கள்" என்று சொல்லி நமது வாழ்வதாரத்தை அழித்து விடு வார்களோ என்ற அச்சத்தில் எழுந்து நிற்பவர் கள்தான் அதிகமாக இருக்கிறார்கள்.


தேர்தல் பணி செய்யாமல், வருகிறவர்களின் பதவி, பணத்தைப் பார்த்து எழுந்திருக்கின்ற தேர்தல் பணியாளர்களை, பணிநீக்கம் செய்ய, தேர்தல் ஆணையம் முன்வருமானால் அன்று தான் வாக்குப்பதிவு அறையில் மக்களாட்சி நிலவும்.

ஒரு சில வாக்குப்பதிவு மையங்களில், வாக்குப் பதிவு நேரம் முடிகின்ற தருவாயில், வாக்குப்பதிவு விழுக்காட்டை உயர்த்திக் காட்ட, அங்குள்ள கட்சி முகவர்களிடம், வாக்களிக்க வராதவர்களின் பெயர்களில் நீங்கள் ஆளுக்கு இருபது ஓட்டுகள் போட்டுக் கொள்ளுங்கள், நூறு ஓட்டுகள் போட்டுக் கொள்ளுங்கள் என்று தேர்தல் பணியா ளர்கள் சொல்லி வாக்குகள் அளிக்கப் பட்ட தாவும் பேசப்படுகிறது. வாக்குப்பதிவின் இறுதி நேரத்திரல் தேர்தல் ஆணையம் மிகுந்த கவனத்துடன் இருந்து இந்தத் தவறுகள் நடவாதபடி பார்த்துக் கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

வாக்குப்பதிவு செய்யும் இடத்தில் இடது கை ஆட்காட்டி விரலில் அடையாள மை வைப்பது என்பது, இவர் வாக்களித்துவிட்டார் என்பதைக் குறிப்பதற்கா? அல்லது இவர் வாக்குப்பதிவு செய்ய தகுதியானவர் என்பதைக் குறிப்பதற்கா? வாக்களிக்க தகுதியானவரா என்பதைப் பரீட்சிக்க, அவர் பெயர் அனைத்துக் கட்சிகளின் முகவர்கள் காதில் விழும் விதமாகச் சொல்லப் படுகிறது, அவரது வாக்காளர் எண்ணும் சொல்லப்படுகிறது, கையெழுத்து வாங்கப்படு கிறது. அதன்பின்னர் வாக்களிக்கலாம் என்பதற் காக ஒரு அனுமதிச்சீட்டு வழங்கப்படுகிறது. அதற்கடுத்து மை வைக்கப்படுகிறது. இந்த மையை வாக்களித்தபின் வைப்பதுதான் முறை யாக இருக்கும்.

வாக்களித்துவிட்டார் என்பதற்கு அடையாளமாகத்தான் இந்த மை வைத்தல் பார்க்கப்படுகிறது. ஒருவருக்கு விரலில் மை வைத்தபின் அவர் வாக்களிக்கச் செல்கிறார், வாக்குப்பதிவு எந்திரம் பழுதாகிறது, ஒரு அரைமணி நேரம் வரை பழுதுநீக்கும் வேலை செய்யப்படுகிறது. அப்போது அந்தக் கையில் மை வைக்கப்பட்ட நபர் வாக்களித்தவராகக் கருதப்படுவாரா? அல்லது வாக்களிக்க வேண்டியவராக கருதப்படு வாரா? வெளியில் இருந்து ஒரு அதிகாரி வந்தால் ஓட்டு போட்டுவிட்டீர்களே, அடையாள மை உங்கள் விரலில் இருக்கிறதே, நீங்கள் ஏன் நிற்கிறீர்கள் என்று கேட்கமாட்டாரா? அதற்கு அங்கு பணியிலிருப்பவர்கள் விளக்கம் சொல்லி அவர் வாக்களிக்க வேண்டியவர் என்பதைக் கூற வேண்டிய கட்டாய நிலை ஏற்படுமல்லவா? ஆகவே வாக்களித்த பின் உடனே மை வைப்பது தான் சரியான நடைமுறையாக இருக்கும். மக்களாட்சி நடக்கிற நாட்டில் அதற்கேற்ற சீர் திருத்தங்களை அவ்வப் போது செய்து கொண்டே இருப்பதுதான் மக்களாட்சியைக் காக்கும் செயலாகும்.


**வேர்மகள்.**



முருகன்



பேரறிவாளன்



சாந்தன்

# உண்மையைத் தேடி

2 • இராஜாசிங்

ராஜீவ் கொலையின் மையப்புள்ளியை நீக்கி விட்டு மற்றவற்றை ஆராய்ந்து முடித்திருக் கின்றனர் என்றுதான் எண்ணத்தோன்றுகிறது. இந்த விசாரணயில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் நேர்மையானவர்கள் அல்ல என்பதை அவர்கள் தனித்தனியே எழுதிய புத்தகங்களும், பேட்டி களுமே நமக்குக் கூறுகின்றன. இவர்கள் ஏதோ ஒன்றிற்கு அடிமைப்பட்டு இந்த விசாரணை முடிவைத் தவறுதலாக வெளியிட்டு, அப்பாவி களை, ஏழைகளை, நாதிஅற்றவர்களை, அனா தைகளை தெளிவாகச் சிக்க வைத்திருக்கின்றனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. இக்கொலையில் நமக்கு ஏற்படும் சந்தேகங்களை நாம் எடுத்து வைக்கிறோம். இந்த ஒரு கொலையை வைத்தே தமிழர்களை ஒடுக்கும் கேவலமான செயல் பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் என்பதற்காகத் தான் இதையெல்லாம் நாம் எழுத வேண்டி வருகிறது.

திமுக, சி.ஐ.ஏ, மொசாத், உல்ஃபா, காஷ்மீர் தீவிரவாத இயக்கங்கள் இவைகளையெல்லாம் சந்தேகப்பட்ட விசாரணை அதிகாரிகள், இராசீவ் காந்தி இலங்கை சென்றபோது ஒரு சாதாரண சிப்பாய், தனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தபோது அவரைக் கொன்று விட வேண்டும் என்று துப் பாக்கியால் அடித்தானே அதை ஏன் எண் ணாமல் விட்டார்கள்? இராசீவ் செயவர்தனே ஒப்பந்தத்தால் தங்களத உரிமை பறிபோய்விடும் என்ற எண்ணம் சிங்களர்களிடம் இருந்திருக் கிறது. அதானால் தான் அன்று அந்த நிகழ்வு நடந்தது. சிங்களவனின் அந்த எண்ணத்தின் காரணமாகத்தான் இதுவரை அந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது.



உதாரணமாக நாம் சொல்ல வேண்டும் என்றால், சீக்கியர்களின் வழிபாட்டுத்தலத்தில், இந்திராகாந்தி அவர்கள் ஒரு நடவடிக்கையை எடுத்ததின் விளைவாக நமது உரிமைகள் பறிபோய்விடுமோ என்ற அச்ச உணர்வின் அடிப்படையில்தான் அப்போது இந்திராகாந்தி சீக்கியர்களால் கொல்லப்பட்டார். அதைப் போலவே ராசீவ், செயவர்த்தனே ஒப்பந்தத்தால் தங்களது உரிமை பறிபோய்விடும் என்று அச்சப்பட்ட சிங்களர்கள் ஏன் இந்தக் கொலை யில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடாது. அதாவது அங்கு சிறுபான்மையாகவும் பெரும்பான்மை யாகவும் இருக்கிறவர்கள் தங்களது உரிமை பறி போய்விடுமோ என்ற அச்சத்தில் எந்தச் செயலுக் கும் இறங்குகிற நிலை இருந்ததல்லவா? இந்த ஒப்பந்தம் தங்களைப் பாதிக்கும் என்று நினைத்த சிங்களவன் ஏன் இந்தக் கொலைக்குக் காரண மாக இருந்திருக்கக் கூடாது. இந்தக் கோணத்தில் விசாரணை நடந்ததா? இல்லை.

இன்னொரு உதாரணம், மகாத்மா அவர்கள், கீழ்த்தட்டு மக்களை மேல் நோக்கி ஏற்றிவிட்டு எல்லோரும் சமம் என்று நிலையை ஏற்படுத்தி விடுவாரோ என்ற நினைப்பில்தானே கோட்சே மகாத்மாவின் உயிரைப் பறித்தான். இப்படி யெல்லாம் முன்மாதிரிகள் இருக்க, சிங்களர்கள் தாங்களோ, அல்லது கூலிப்படை மூலமாகவோ இராசீவைக் கொன்றிருக்கலாம் என்ற கோணத் தில் விசாரணை நடந்ததா? இல்லை. இப்படி யெல்லாம் அவர்கள் விசாரிக்காதது வியப்பாக இருக்கிறது.

கார்த்திகேயன், தான் எழுதிய புத்தகத்தில் கூறுகிறார். தான் இலங்கைக்குச் சென்றபோது தமிழகத்தில் இராசீவ் கொலையாளிகள் எந்த இடத்தில் இருக்கிறார்கள், எங்கு சந்திக்கிறார்கள், எங்கு எங்கு செல்கின்றனர் என்ற விபரங்கள் சிங்கள அரசால் தனக்குத் தரப்பட்டதாகச் சொல்கிறார்.

இந்தக் கூற்று நமக்கு நெருடலை ஏற்படுத்து கிறது. விடுதலைப்புலிகளை மிக உன்னிப் பாக கவனித்துக் கொண்டிருந்த இலங்கை அரசு, தமிழகத்தில் இருந்த விடுதலைப்புலிகளைக்கூட உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த அரசு, இராசீவ் காந்தி கொலை செய்யப்படப் போகிறார் என்று, நட்பு நாடான இந்தியாவிற்கு தகவல் தராதது ஏன்? ஜான் எஃப் கென்னடியைக் கொன்றவனைக் கொன்று கொலைக்கு முற்றுப் புள்ளி வைத்தனர். ஆனால் 38 ஆண்டுகள் கழித்து அந்தக் கொலைக்குக் காரணமான உண்மை வெளிவந்தது. அதுபோல இந்தக் கொலையிலும் இவ்வளவு காலம் சென்று இப்போது மாற்றி மாற்றிப் பேசி வருகின்றனர். இவரது கூற்று இந்தியாவில் உள்ள பாதுகாப்புத் துறை முற்றிலும் முடங்கிவிட்டது போன்ற எண்ணத்தை ஏற்படுத்தி, நாட்டு மக்களை அச்சத் தில் உறையவைக்கும் பேச்சால் மற்ற அதிகாரிகள் பயனற்றவர்கள் என்று கூறும் வாதம் ஏற்புடைய தல்ல.

ரா அமைப்பால் விடுதலைப்புலிகள் உன்னத நிலைக்கு வந்ததையும் சகோதரயுத்தத்தை மக்கள் விரோத செயல்களில் ஈடுபட்டதையும் விசாரித்து தங்கள் புத்தகத்தில் எழுதாமல் போனதென்ன? ரகோத்தமன் எப்படிப்பட்டவர் என்பதற்கு ஒரு சான்று. ஒரு ஏழை போட்டோ கிராபர் அரிபாபு. விசாரணை அதிகாரி ரகோத்தமன் அவரது வீட்டிற்குச் சென்றபோது அவருடைய தாயார் இவரை சோகத்தோடு வரவேற்று அமரச் சொன் னார்களாம். அந்தத் தாயார் தனது ரவிக்கையில் மறைத்து வைத்திருந்த கற்றயான பணத்திலிருந்து ஒரு நூறு ரூபாயை ஒரு சிறுவனிடம் கொடுத்து டீ வாங்கி வரச் சொல்லியனுப்பினாராம். அது இவருக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியதாம். அதனால் அரிபாபு வீட்டை நோட்டம் விடச் சொன்னதாகவும், அரிபாபுவுக்கு விடுதலைப்புலி களுடன் தொடர்பு இருப்பதைக் கண்டுபிடித் ததாகவும் சொல்லும் இந்த நேர்மையான அதிகாரி தந்தி தொலைக்காட்சியில் மக்கள் முன்னால் என்று சீமான் அவர்கள் நடத்திய (15 12 2013) நிகழ்ச்சியில் மோகன்ராஜ் என்ற ஆய்வாளர் கூறிய செய்தியை மறுக்காமல் புன்னகையுடன் ஆமோதித்ததையும் நாம் பார்க்கும் போது இவர்களுடைய நேர்மை சந்தி சிரிக்கிறது.

அவர் நேர்மையானவராக இருந்திருந்தால் தன்பதவியை உதறிவிட்டு உலகத்திற்கு உண் மையை எடுத்து இயம்பியிருப்பார். ஆனால் பாவம் அவர் அடிமைப்பட்டவர் என்பதால் நடந்த எல்லாவற்றையும் கண்டுகொள்ளாமல் இருந்து விட்டார்.

பவானி என்ற பெண்மணி, என் கணவனை அழைத்துச் சென்று போய் கொன்று விட்டார்

கள் என்று ஒரு கடிதத்தை ஆய்வாளர் மோகன் ராஜ் அவர்களிடம் கொடுத்துவிட்டு மரகதம் சந்திரசேகர் அவர்கள் மருமகனுக்கு எல்லாம் தெரியும் என்று கூறிவிட்டு அமெரிக்காவுக்குச் சென்று விட்டார். இந்தக் கடிதத்தை மோகன் ராஜ் என்ற ஆய்வாளர், கார்த்தி கேயனிடம் அந்தக் கடிதத்தைக் கொடுத்தவுடன், அவர் நமது குழு அமெரிக்காவில் இருக்கின்றது. இதை உடனே அவர்கள் விசாரிப்பார்கள் என்று கடிதத்தைப் பெற்றபோது சொல்லிவிட்டு அமெரிக்காவில் இருந்த விசாரணைக்குழுவிற்கு இவர் தகவல் தெரிவிக்கவில்லை.

அந்தக்குழு அமெரிக்காவில் இருந்து திரும்பி வந்தவுடன் மோகன்ராஜ் என்ற ஆய்வாளர் ரகோத்தமனிடம் கேட்டபோது எனக்கு அந்தத் தகவல் வரவில்லை என்று கூறினார். அப்போது அங்கு மோகன்ராஜ் நடந்த விபரத்தை எல்லாம் எடுத்துக் கூறினார். அந்த நேரத்தில், தன்னிடம் கார்த்திகேயன் உண்மையை மறைக்கின்றார் என்ற எண்ணம் ரகோத்தமனுக்குத் தோன்றாமல் போன விந்தையை என்ன என்று சொல்வது!

ஏழையின் வீட்டில் 100 ரூபாயைப் பார்த்தவுடன் சந்தேகம் வருகிறது. ஆனால் உயர் அதிகாரி உண்மையை மறைத்தபோது இவர் கண்டு கொள்ளாமல் போனது என்ன என்று கூறுவது!. இவர் ஒரு நேர்மையான அதிகாரியா? மேலும் தனது புத்தகத்தில் விடுதலைப்புலிகள் என கண்டு பிடிக்கப்பட்டபிறகும் ஆதாரங்கள் கிடைக்கப் பெற்ற பிறகும் வாக்குமூலங்கள் பெறப்பட்ட பிறகும் பல மர்ம முடிச்சுகள் அவிழ்க்கப்படாமல் இருந்தன. இன்னமும் கூட சில சந்தேகங்கள் சந்தேகங்களாகவே நீடிக்கின்றன.

சில குழப்பங்கள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பலர் விசாரிக் கப்படவில்லை. சிலர் காப்பாற்றப் பட்டனர். சிலர் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள அனுமதிக்கப் பட்டனர் என்று தன்னுடைய புத்தகத்தில் தெள்ளத் தெளிவாக எழுதியிருக்கின்றார். இது எதைக் காட்டுகிறது? குற்றவாளிகள் தெளிவாக தப்புவிக்கப்பட்டுள்ளனர் என்பதை தெளிவாக ஒப்புக்கொண்டு உள்ளார். அது மட்டுமல்ல அரசியல்வாதிகள் விசாரிக்கப்படவில்லை என்றால், விசாரித்து குற்றவாளிகள் என தெரிவித்தது யாரை?

மேலும் இவர்கள் நீதி வழங்கும் நீதிமன்றத்தையும் நீதிஅரசரையும் மதிக்கவில்லை. எப்படி எனில் விசாரித்து முடிக்காத வழக்கிற்கு உலகில் எங்காவது தீர்ப்பு வழங்க முடியுமா? நீதி மன்றத்தால் எப்படி நீதி வழங்க முடிந்தது? குற்றவாளிகளை தப்பவிட்டோம். தப்பிப்பதற்கு அனுமதித்தோம் என்றால், உள்ளே தண்டனைக் கைதிகளாக இருப்பர்கள் யார்? குற்றவாளிகளை தப்பவிட்டோம்.

குற்றவாளிகளை விட்டு விட்டோம் விசாரிக்கவில்லை என்று கூறும் இவர்கள் தங்கள் கையில் அதிகாரம் இருக்கிறது என்ற மமதையில் அனாதைகளையும், ஏழை களையும், திக்கற்ற தமிழர்களையும் குற்றவாளிகள் எனக்கூறி, நீதிமன்றத்தை தெரிந்தே ஏமாற்றி யிருக்கின்றனர். இவர்களுக்கு நீதிமன்றம் என்ன தண்டனை வழங்கப்போகிறது?

தமிழர்களை அழிக்கும் இவர்களைப் போன்றவர்களுக்கு நீதிமன்றம் தானாக முன்வந்து இவர்களைக் கைது செய்திருக்க வேண்டாமா? இவர்களை விசாரித்து உண்மையை உலகிற்கு சொல்லியிருக்க வேண்டும் நீதிமன்றம். ஆனால் அது நடக்கவில்லை. இந்தியாவில் தமிழன் என்றால் நீதிமன்றம்கூட தன் கடமையைச் செய்ய மறுக்கும் மர்மம் என்ன என்பது விளங்கவில்லை.

விசாரணை அதிகாரிகள் இன்றைய ஊடகங்கள் வாயிலாக அவர்கள் செய்த தவறுகள் அனைத்தும் வெளிக்கொண்டு வரப் பட்டு புதிய தலைமுறை, தந்தி, சத்தியம் போன்ற தொலைக் காட்சிகள் உலகிற்கு தெரிவித்தவுடன் இந்தக் காரியத்தில் தமிழ்மக்களுக்கு நீதி கிடைத்துவிடும் என்ற நோக்கில் செய்திகளைச் சிதைப்பதிலும், சிக்கலாக்குவதிலும், திசை திருப்புவதிலும் கவனம் செலுத்துகிறார்களே ஒழிய செய்த தவறுகளுக்காக வருந்துவதாகத் தெரியவில்லை.

தொடரும்...

Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5, Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 weavers street triplicane, chennai-5, Editor: **V. THALAPATHI.**



Réserver
Aerosysteme
Airmail
Language:
BOCACHICACINEMA.COM
HOME
SHOW TIME
TRAILER
GALLERY
OWN PRODUCTION | BLU-RAY | DVD&CD | MP3 | AUDIO LANCH | E-STORE | ABOUT US | CONTACT US
COMMING SOON
KOCHADAIYAAN
soon
Andava Perumal
soon
Kiripillai
soon
kovalanin kathali
soon
Vetry Selvan
soon
இன்றைய விளம்பரம்
RADIOTAM.COM
CINE BOUTIQUE
cineworld.co.uk
safaricinema.com
boleyncinema.com
5K
SILVER
SCREEN
Boca Chica Cine Circuit
24/17, Door No:F1, Sevamani Apt
Bajanai koil 2nd street, Vadapalani, chennai-600 026
call: 98411 57476

MUTRAM - Tamil & English Monhtly R.Dis No. 1678-2012
RNI No. TNBIL/2010/36924

விசுவனூர் வே.தளபதி
எழுதிய

# சிறுகதைகள்

